LAKSALA
State Gift & Souvenir Boutique

# ශ්‍රී ලංකා හස්ත කර්මාන්ත මණ්ඩලය
# இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை
# Sri Lanka Handicrafts Board







# වාර්ෂික වාර්තාව
# ஆண்டு அறிக்கை
# Annual Report
# 2021

LAKSALA

STATE GIFT & SOUVENIR BOUTIQUE

# ஆண்டறிக்கை 2021

## லக்சல

## இலங்கை கைப்பணிகள் சபை

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிறுவனப் பின்னணி | 01 |
| லக்சல காட்சிகூடங்களின் வலையமைப்பு | 02 |
| நோக்கு மற்றும் செயற்பணி | 03 |
| செயலாற்றுகை மீளாய்வு, தொழிற்பாட்டு மீளாய்வு | 04 - 11 |
| பணிப்பாளர் சபை | 12 |
| சிரேʻட முகாமைத்துவக் குழு | 13 |


## நிதிக் கூற்றுக்கள்


| | |
|---|---|
| ஆண்டு தொடர்பான சாராம்சம் | 19 |
| விரிவான வருமானக் கூற்று | 20 |
| நிதி நிலைமைக் கூற்று | 21 |
| உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று | 22 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 23 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 24 - 47 |
| கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை | 49 - 61 |

# அமைப்பின் தகவல்கள்

## சபையின் பெயர்

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

## சட்டத்துடனான படிவம்

1982ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க, தேசிய கைப்பணிகள் சபை மற்றும் இணைந்த நிறுவனங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

## பிரதான அலுவலகம்

இலக்கம் : 215, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு.7

தொலைபேசி : 011 2055132 / 011 2055501

தொலைநகல் : 011 2594872

## சந்தைப்படுத்தல் தகவல் விசாரணை

மின்அஞ்சல் முகவரி : *info@laksala.gov.lk*

இணையதளம் : www.laksala.gov.lk

## விற்பனை தகவல்கள்

தொலைபேசி : 011 2597797

மின்அஞ்சல் முகவரி : *info@laksala.gov.lk*

## கணக்காய்வு

கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்

## வங்கிகள்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

# லக்சல காட்சிகூடங்களின் வலையமைப்பு

| | | |
|---|---|---|
| 1.கோட்டை | இலக்கம் 60, யோர்க் வீதி, கொழும்பு 01 | 0112323514 |
| 2.தும்முல்லை | இலக்கம் 215, பௌத்தாலோக்க மாவத்தை, தும்முல்லை, கொழும்பு 07. | 0112580579 |
| 3.கண்டி | இலக்கம் 05, சங்கராஜ மாவத்தை, கண்டி | 0812222087 |
| 4.கட்டுபெத்த | இலக்கம் 282, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ | 0112605600 |
| 5.தேசிய நூதனச்சாலை | லக்சல, நூதனச்சாலை வளாகம், கொழும்பு 07. | 0112698263 |
| 6.பத்தரமுல்லை | அபேகம, பெலவத்தை, பத்தரமுல்லை. | 0112786026 |
| 7.வெலிபன்னை I | தெற்கு அதிவேக வீதி, விராம மந்திரய, சேவை பிரதேசம், ''பி'', ஏ5 மற்றும் ஏ6, வெலிபன்னை | 0342241607/8 |
| 8. காலி | இலக்கம் .74/1, சமுத்திர மாவத்தை, காலி. | 0912222783 |
| 9.பின்னவளை | யானைகளின் சரணாலயம், பின்னவளை. | 0352265015 |
| 10.பேராதனை | இலக்கம் 14, தாவரவியல் பூங்கா, பேராதனை. | 0812389253/63 |
| 11.கட்டுநாயக்க | 54டி, வெளியேறும் போக்குவரத்து பகுதி , பண்டாரநாயக்கா சர்வதேசவிமான நிலையம், கட்டுநாயக்க | 011226017 |
| 12.நுவரெலியா | இலக்கம் 79. பழைய உடுபுஸ்ஸல்லாவ வீதி, நுவரெலியா | 052-2234445 |

# எமது நோக்கு

இலங்கையில் பரிசுகள் மற்றும் நினைவுப் பரிசு பொருட்கள் சந்தையி முதன்மையாளர் ஆகுதல்.

# எமது செயற்பணி

பரிசுகள் மற்றும் நினைவுப் பரிசு பொருட்கள் துறையில் வளர்ச்சித் திறனை விரிவுபடுத்துவதோடு, சுற்றுலாக் கைத்தொழிலுக்கு உயர் பெறுமதிகளை சேர்க்கும் பங்களிப்பை வழங்கி, கிராமிய உற்பத்தியாளர்களுக்கு பெரிய விரிவான சந்தை வாய்ப்புகளுக்கு வசதியளித்து, சமூக பொறுப்புகளை நிறைவேற்றும் வர்த்தக ரீதியாக சாத்தியமான நிறுவனமாதல்.

# எமது கேந்திர பெறுமதிகள்

- ☐ தரம், நம்பகத்தன்மை மற்றும் பணத்திற்கான பெறுமதி.
- ☐ பன்முகப்படுத்தப்பட்ட பரிமாணத்தின்மூலம் சிறந்த வாடிக்கையாளர் தேர்வுக்கான வாய்ப்புகளை வழங்குதல்.
- ☐ கிராமிய மக்களிடையே பெறுமதிகளை உருவாக்குதல் மற்றும் பெறுமதிகளை பரிமாற்றம் செய்தல்
- ☐ வாடிக்கையாளர்களை ஆகக்கூடிய மட்டத்தில் திருப்திபடுத்தல்.

# நிலைபேறுடனான அபிவிருத்தி இலக்குகள்

- ☐ 2030ஆம் ஆண்டில் உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்கின்ற உற்பத்திகளின் அளவுகளை இரட்டிப்பாக்கி உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்தல்.
- ☐ 2030 ஆண்டாகும்போது பாலின சமத்துவத்தை அடைந்துக்கொள்ளும் நோக்கத்துடன் லக்சலவ பொருட்கள் வழங்கும் பெண் வழங்குநர்களின் மொத்த எண்ணிக்கையை 50% ஆல் விருத்தி செய்தல்.
- ☐ விசேட தேவைகள் உள்ளவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2030 ஆகும்போது விசேட தேவை உள்ள வழங்குநர்களின் எண்ணிக்கையை 25% ஆல் விருத்தி செய்தல்.





உள்நாட்டு கைப்பணிகள் உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன், 1964 ஆம் ஆண்டில் லக்சல நிறுவனம் தாபிக்கப்பட்டதுடன், 1982 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் சட்டத்தின்கீழ் இலங்கை கைப்பணி கைத்தொழிற் சபையாக அதனை தாபிக்கப்பட்டது. இத் துறையில் தற்போது லக்சல நிறுவனமானது அரசாங்கத்திற்குரிய மிக பழமையானதும் பெரியதுமான வலையமைப்பாகி உள்ளது.


.

**<u>நிதிசார் செயலாற்றுகை சாராம்சம்</u>**

2021 ஆவது மீளாய்வுக்கான ஆண்டில் லக்சலவின் மொத்த விற்பனை புரள்வு ரூபா 137, 495,835.00 ஆக பதிவு செய்துள்ளதுடன், அதன் விற்பனை செலவினம் ரூபா. 70,979,440.00 ஆகும். பின்வரும் வரைப்படம் மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் லக்சலவின் ஒட்டு மொத்த விற்பனை சாராம்சம் காட்டப்படுகின்றது.





2021 ஆம் ஆண்டில் விற்பனை பகுப்பாய்வில் தும்முல்லை காட்சிக்கூடம் ரூபா. 53, 131,642 ஆன விற்பனை மேற்கொண்டு விற்பனைகளின் பொருட்டு பிரதான பங்களிப்பை வழங்கியுள்ளதுடன், ஒழுங்குமுறையில் விற்பனை புரள்வு ரூபா. 9,736,767.00 மற்றும் ரூபா. 9,350,552.00 ஐ பதிவு செய்து கோட்டை லக்சல கண்காட்சிக்கூடம் மற்றும் காலி லக்சல காட்சிக்கூடம் 2021 ஆம் ஆண்டில் விற்பனை வருமானத்தில் உயர் பங்களிப்பு வழங்கியுள்ளது.





<u>கொள்வனவு பகுப்பாய்வு</u>

2021 ஆண்டில் லக்சல ரூபா. 26,005,361.45 ஆன பெறுமதிக்கு வியாபார கொள்வனவுகளை மேற்கொண்டுள்ளது. பின்வரும் வரைப்படம் மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் கொள்வனவுகளின் செல்நெறி தொடர்பான விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.





பின்வரும் வரைப்படத்தின் வகைப்படுத்தலுக்கு அமைவாக 2021 ஆம் ஆண்டின் ஏற்புடைய கொள்வனவுகள் மேலும் காண்பிக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டில் கொள்வனவுகளை பகுப்பாய்வு செய்கையில், வியாபார கொள்வனவுகளில் அதிகூடிய சதவீதம் கலை மற்றும் கைப்பணி துறைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.




| செலவினம் | Y2020 | Y2021 |
|---|---|---|
| நிருவாக செலவினம் | 188,621,582 | 187,070,962 |
| விநியோகச் செலவினம் | 17,834,739 | 8,239,659 |
| நிதிசார் செலவினம் | 37,004,985 | 42,050,371 |
| | ***243,461,306*** | ***237,360,992*** |

பின்வரும் வரைப்படம் மூலம் முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த செலவினத்தின் கட்டமைப்பு பின்வருமாறாகும்.



**செயலாற்றுகை ஆய்வு – 2021 ஆம் ஆண்டு**

**பின்னணி**

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சலவின் 2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகை ஆய்வறிக்கையினை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். உள்நாட்டு கைப்பணிகள் உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன், லக்சல நிறுவனம் 1964 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதுடன், 1982 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் சட்டத்தின்கீழ் இலங்கை கைப்பணிகள் சபையாக அதனைத் தாபிக்கப்பட்டது. இத் துறையில் தற்போது லக்சல நிறுவனமானது அரசாங்கத்திற்குரிய மிக பழமையானதும் பெரியதுமான வலையமைப்பாகி உள்ளது.

**மூலோபாய அணுகுமுறை**

ஆரம்பிக்கப்பட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தமது விற்றுமுதல், இலாபம் மற்றும் குறித்த துறையில் நிலையான நிலைப்பாட்டுக்கு தேவையானதும் அத்தியாவசியமானதுமான, வாடிக்கையாளர்களை மனம் கவரச் செய்தல் ஆகிய துறைகளை மேம்படுத்திக் கொண்டுள்ளதுடன், தேவைகளுக்கும் வேண்டுகோள்களுக்கும் பொருந்துகின்ற வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகளை மேலும் வலுவூட்டப்பட்டது. அதாவது,

- தமது சந்தைப்படுத்தல் பொருட்களின் வகுதிகளை விரிவாக்கப்பட்டு புதிய சந்தையினை அடைந்துக்கொள்ளுதல். (Category Expansion)
- தர அடையாளம் (Branding) செயன்முறை ஊடாக நிறுவனப் பெயரை சந்தையில் நிலைநாட்டுதல்
- வாடிக்கையாளர் நட்பு சேவைக்குத் தேவையான வகையில் ஊழியர்களிடையே ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை கட்டியெழுப்புதல்
- இணையத்தளம் ஊடாக லக்சல பொருட்களை கொள்வனவு செய்கின்ற வசதிகளை மேலும் விஸ்தரித்தல் (Online sales Facilities )
- இலங்கை சுற்றுலாச் சபை, இலங்கை சுற்றுலாத் துறை மேம்பாட்டு பணியகம் போன்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் சுற்றுலா நிறுவனங்களுடன் தொடர்ச்சியாக உறவை பராமரிப்பதன் மூலம், லக்சல காட்சிகூடங்களுக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.

லக்சல வர்த்தக பெயரின் கீழ் அறிமுகப்படுத்திய லக்சல காட்சிகூடங்களில் சந்தைப்படுத்தப்படுகின்ற எல்லா பொருட்களின் வரம்புகளையும் மேலும் விரிவாக்கப்படுவதுடன், அவை தரமான மற்றும் உயர்தர பரிசுகளையும் நினைவுச்சின்னங்களையும் கொண்டதாக உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் அத்துடன் விரிவாக்கப்படும். அதற்கமைவாக மிக உயர் தரத்திலான நவீன வடிவமைப்புகளுடன் கூடிய சிறந்த பல பொருட்களை சந்தைப்படுத்தல் பொருட்டு காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், லக்சல

இலங்கையின் பரிசு பொருட்களையும் நினைவுச் சின்னங்களையும் சந்தைப்படுத்தும் ஒரே அரசு மற்றும் பிரதான வர்த்தக நிறுவனமாக உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் மனதில் நிலைநிறுத்துவதற்கு தேவையான சந்தைப்படுத்தல் பணிகளை விரிவாக்கப்பட்டு, வாடிக்கையாளர்களை நிறுவனத்தின் மீது ஈர்ப்பதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**தரஅடையளாம் ஊடாக நிறுவனத்தின் பெயரை சந்தையினுள் நிலைப்படுத்தல்.**

தற்கால சந்தையின் தேவைகளுக்கு ஏற்ப லக்சல தனது காட்சிகூடங்களை உயர் தரத்திற்கு கொண்டு வந்துள்ளது. அதற்கமைவாக லக்சல காட்சிகூடங்களை நவீனமயப்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையில் உயர் தரத்திலான வடிவமைப்புகளுடன், லக்சல வர்த்தக பெயரின் கீழ் உற்பத்திகளை அறிமுகப்படுத்தி பொருட்கள் காட்சிப்படுத்தலை உயர்மட்டத்தில் பராமரிப்பதற்கும், தரஅடையாளத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட விற்பனை இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**ஒரு நட்பு வாடிக்கையாளர் சேவைக்கு தேவையான வகையில் பணியாளர்களிடம் ஆக்கப்பூர்வமான உளப்பாங்கினை கட்டியெழுப்புதல்.**

வாடிக்கையாளர்களின் தேவைகளை அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நட்புடன் கூடிய சிறந்த சேவையினை வழங்குவதற்கும், புதிய சந்தைக்கு ஏற்ற வகையில் பணியாற்ற முடியுமான பணியாற்தொகுதியினரை பராமரித்துச் செல்வதற்கும் தேவையான பயிற்சி மற்றும் ஊக்கமளிப்புகள் வாயிலாக அவர்களின் வினைத்தறின் உயர்மட்டத்தில் பேணுவதற்கு பணியாற்றப்பட்டது. அதற்கமைவாக சம்பளம் மற்றும் கொடுப்பனவு என்பன அவர்களின் வினைத்திறன் மற்றும் விளைவுத்திறன் ஊடாக மேற்கொள்வதன்மூலம் அவர்களை ஊக்குவித்தலானது நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு பெரும்பாலும் உதவியாக அமைந்தது.

**உற்பத்திகளின் விரிவாக்கம்**

புதிய மூலோபாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறுவனத்தின் பணிகள் மட்டுமல்லாது தமது வியாபார பொருட்களின் வகுதிகளையும் விரிவாக்குவதற்கு தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் சபை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் இணைந்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உள்நாட்டு உற்பத்திகளின் தனித்துவத்தை பாதுகாத்துக்கொண்டு தற்கால சந்தையின் தேவைகளுக்கமைவாக புதிய படைப்புகளை உயர் தரத்துடன் நிருமாணிக்கப்பட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது மேலும், பரிசுப்பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் மட்டுமல்லாது இரத்தினக்கல், ஆபரணங்கள், தேயிலை, மசாலா பொருட்கள், தோல்பொருட்கள், மட்பாண்டங்கள் மற்றும் உள்நாட்டு முகமூடிகள் மற்றும் ஏனைய நினைவுப் பொருட்கள் அறிமுகப்படுத்தியதுடன், லக்சல புதிய படைப்புப் பிரிவு மூலமும் புதிய கைப்பணி உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக பரிசு பொருட்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் துறையில் புதிய பல படைப்புகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**வலையமைப்பு**

லக்சல வலையமைப்பு ஊடாக காட்சிக்கூடங்களில் விற்பனை செய்வதற்கு தேவையான பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை கொள்வனவு செய்தல் போன்றே குறித்த பொருட்களின் திட்டமிடல், தரக் கட்டுப்பாடு மற்றும் நவீன வடிவமைப்புகளை வழங்குதலும் உள்ளடங்குகின்றது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் முனைப்பான வழங்குநர்களின் எண்ணிக்கை 243 ஆகியதுடன், ஒட்டுமொத்த உள்நாட்டு கைப்பணியாளர்களின் எண்ணிக்கை இவ்வாண்டில் மேலும் விருத்தியடைந்துள்ளதுடன், புதிய சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கப்பட்டது. ஆகையால் இதன்மூலம் புதிய உற்பத்தியாளர்கள் இத் துறையை அணுகுவதற்கான வாய்ப்புகள் விரிவாக்கப்பட்டன.

**நிருவாகம்**

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல நிறுவனம் அதன் முழுமொத்த தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்கு ஏற்புடையதான சட்ட திட்டங்கள், அரசாங்கத்தின் சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய நிதி மற்றும் நிருவாக ஆலோசனைகளை பின்பற்றி தமது செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளதுடன், நல்லாட்சி மற்றும் பெறுகை வழிகாட்டல்களை உரியவாறு பின்பற்றியுள்ளதாக சான்றுப்படுத்தப்படுகிறது. அமைப்பின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்துக்கொள்ளும்போதும் ஏனைய உதவி சேவைகளை வழங்கும்போதும் நிறுவனத்தின் நிருவாகம் மற்றும் மனிதவள பிரிவு என்பன முகாமைத்துவம் தொடர்பாக முக்கியமான கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளன. மீளாய்விற்கான ஆண்டில் நிறுவனத்தின் பதவியணி 118 பேர்களைக் கொண்டமைந்திருந்ததுடன், அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

2021/12/31 ஆம் திகதியில் மொத்த பணியாற்தொகுதி

| | | |
|---|---|---|
| சிரேʻட மட்டம் | 08 | |
| இடைநிலை மட்டம் | 08 | |
| மூன்றாம் நிலை மட்டம் | 54 | |
| ஆரம்ப மட்டம் | 09 | 79 |
| | | |
| ஒப்பந்த பணியாற்தொகுதி | | 39 |
| மொத்த எண்ணிக்கை | | 118 |

முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் பணியாற்தொகுதியின் நிலைமை 129 தொடக்கம் 118 வரை குறைந்துள்ளதாக அறியலாம். போட்டியுடன்கூடிய விற்பனை சூழலில் சிறப்பான வகையில் தயாரிக்கப்பட்ட குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால வியாபார திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டான முயற்சியின்போது, நன்கு பயிற்சி பெற்ற, அர்ப்பணிப்பு மற்றும் வினைத்திறனுடன்கூடிய பணியாற்தொகுதியை கட்டியெழுப்புவதற்கு பாரிய பணியை ஆற்றப்படுகிறது.

சந்தைப்படுத்தல் பணியாற்தொகுதிக்கும் உதவி பணியாற்தொகுதிக்கும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன்மூலம் சேவையின் பண்புசார் தன்மை மற்றும் விளைவுத்திறன் என்பவற்றை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2020 ஆம் ஆண்டு ஆரம்பம் தொடக்கம் மற்றும் 2021 ஆம் ஆண்டிலும் நிலவிய கொவிட் 19 உலகளாவிய தொற்று நோய் நிலைமை மற்றும் பயணத்தடை காரணமாக, நாட்டுக்கு வருகை தருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பெரும்பாலும் குறைவடைந்ததடன், அதன் காரணமாக திட்டமிடப்பட்டிருந்த சந்தைப்படுத்தல் இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு சிரமமாகியதால் வருமானம் உருவாக்குவதற்கு முடியாமை காரணமாக நிறுவனத்தின் வருமானம் வீழ்ச்சிக்கண்டது. அதன்படி அத்தியாவசிய குறைந்த அளவிலான செலவினங்களை தானும் மேற்கொள்வதற்கு இயலாது, நிறுவனம் சில சிரமங்களை எதிர் நொக்கியது.

2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை சிறப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுவதால், சுய நிதியிடல் வர்த்தக நிறுவனமாக புதிய திட்டத்தின் கீழ் சந்தைப்படுத்தல் பணிகளை மேலும் விருத்தி செய்வதற்கான அனைத்து உபாயமுறைகளையும் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள்.

| இலக்கம் | பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் | நியமனக் காலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| 1. | திரு.சஜித் எம். கொடிகார | 03.01.2020 | 02.05.2023 |
| 2. | திருமதி மதுமாலீ அல்விஸ் (சட்டதரணி) | 03.01.2020 | 02.05.2023 |
| 3. | திரு.கே.எல்.எம்.சமரதுங்க | 03.01.2020 | 09.01.2023 |
| 4. | திருமதி.என்.பீ.ஏ.ஆர்.ஜயவர்தன | 24.01.2020 | 02.03.2022 |
| 5. | திரு.டீ.ஜீவநாதன் | 09.10.2020 | தற்கால |
| 6. | திரு.பிரதீப் குணவர்தன * | 12.10.2020 | 07.05.2021 |
| 7. | திரு.லக்மால் விக்கிரமஆரச்சி (சட்டத்தரணி) * | 11.11.2020 | 23.12.2022 |
| 8. | திரு.சஞ்சீவ தர்மவர்தன | 08.06.2021 | 02.05.2023 |

* பணிப்பாளர் சபின் உறுப்பினராகவும், இலங்கை கைப்பணி சபை – லக்சல தலைவராகவும் பணியாற்றப்பட்டுள்ளது.

**இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல**

**சிரேஷ்ட முகாமைத்துவ குழு**

| | |
|---|---|
| திரு.சீ.என்.தஹநாயக்க | பதில் கடமையாற்றும் முகாமைத்துவ பணிப்பாளர / பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் நிருவாகம்) |
| திரு.கே.பீ.பீ.எஸ்.கே.பத்திரண | பிரதான உள்ளக கணக்காய்வாளர் |
| திரு.கே.சீ.ஜயவர்தன | பணிப்பாளர் விற்பனை |
| திரு. ஈ.எலன் தெலில்கன் | பதில் கடமையாற்றும் பணிப்பாளர் (நிதி) |
| திரு.சம்பத் செனெவிரத்ன | பதில் கடமையாற்றும் பணிப்பாளர் (வழங்கல் வலையமைப்பு அபிவிருத்தி) |
| திருமதி வஜிரா சமரரத்ன | பிரதி பணிப்பாளர் (பெறுகை) |
| திருமதி தேவிகா குமாரி அத்துகோரள | பிரதி பணிப்பாளர் (விநியோகம்) |
| திரு.ஏ.எல்.எம்.ரிஸ்வான் | உதவிப் பணிப்பாளர் (வருமானம் மற்றும் செலவினம்) |
| திரு.கயான் லியனகே | பதில் கடமையாற்றும் உதவி பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் நிருவாகம்) |
| திரு.தினேஷ் அபேகோன் | தகவல் தொழில்நுட்ப பிரிவின் தலைவர் |

எமது நன்றி

எல்லாவற்றுக்கும் முதலாக நான் லக்சல நிறுவனம் சார்பாக, இலங்கை சனநாயக, சோசலிசக் குடியரசின் மேண்மைதங்கிய சனாதிபதி அவர்களுக்கும், கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கும், கௌரவ பத்திக், கைத்தறி மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். எமது நிறுவனம் இத் துறையில் உயர்ந்த நிலையினை எட்டுவதற்காக எப்போதும் தேவையான தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் வழங்குதல் தொடர்பில் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், தேவையான எல்லா சந்தர்ப்பங்களிலும் எமது நிறுவனத்தின் முன்னேற்றம் கருதி வழங்கிய ஒத்துழைப்பு பொருட்டு நான் எமது அமைச்சின் செயலாளருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறுவனத்தின் நிருவாக, நிதி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மிக நன்றாக நிறைவேற்றும் வகையில், தமது பணியாற்தொகுதியினரை சிறந்த முறையில் வழிநடாத்திய அனைத்து பிரிவுகளின் தலைவர்களுக்கும், நிறுவனத்தின் நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் பேணிச் செல்வதற்கு பங்களிப்பு வழங்கிய ஏனைய ஒட்டுமொத்த பணியாற்தொகுதியினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம்முடன் இணைந்துக்கொண்டு வாடிக்கையாளர்களின் தேவைகளை சரியாக அடையாளம் காணப்பட்டு, புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தியும், சம்பிரதாய மற்றும் புதிய உற்பத்திகள் அடங்கலாக கைப்பணி மற்றும் நினைவு பொருட்களை வழங்கியும் எம்முடன் இணைந்துக்கொண்ட உற்பத்தியாளர்களுக்கு இதன் போது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமது நிறுவனத்தின்மீது நம்பிக்கை வைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

எதிர் காலத்தில் இலங்கையின் கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கும், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எமது நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்படும் என்பதை அறிய தருவதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் எமது விற்பனை ரூபா.பில்லியன் வரை விருத்தி செய்வதற்கு எதிர் பார்க்கப்படுவதாகவும் இறுதியாக கூறுகின்றேன்.

மேலும், நிறுவனத்தின் மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றை முறையாக முகாமைத்துவம் செய்வதன்ஊடாக ஒட்டுமொத்த பணியாற்தொகுதியிலும் வினைத்திறன் மற்றும் பயனுள்ள பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட முலோபய திட்டத்தின் பிரகாரம், நிறுவனத்தின் பொது செய்றபாடுகளின் செலவுகளை கவனத்தில் கொள்ளக் கூடிய வகையில் குறைத்து 2022 ஆம் ஆண்டில் எமது இலாப சதவீதம் விருத்தியடைகின்ற நிலையில் பேணிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தலைவர்,

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

# இலங்கை கைப்பணிகள் சபை

## நிதிக் கூற்றுகள்

2021 திசெம்பர் 31

2021

**இலங்கை கைப்பணிகள் சபை**

**2021 ஆம் ஆண்டு வருமானம் தொடர்பான பகுப்பாய்வு**

## ஆண்டு தொடர்பான சாராம்சம் - உலகளாவிய சூழலும் இலங்கை பொருளாதாரமும்


2021 ஆம் ஆண்டில் கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக உலகளாவிய பொருளாதாரம் தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டிலும் போராட்டமாகவே காணப்பட்டது. அதன் தொடர்ச்சியான மற்றும் பரவலாக்கத்தின் பயனாக இலங்கை பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியை பதிவு செய்தது.

2019 ஆம் ஆண்டில் ஈஸ்டர் தாக்குதல் மற்றும் 2020/2021 தொற்று நோய் நிலைமை என்பன 2019 ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டில் சுற்றுலா தொழிலுக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், குறித்த நிலைமையானது அவ்வப்போது உலகம் முழுவதும் சுற்றுலா பயணங்களை தடை செய்வதற்கும் காரணமாகியுள்ளது. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் மூடிவிடுதல் மற்றும் நாட்டை முடக்கிவிடுதல் காரணமாக இந் நாட்டில் பொரும்பாலான நிறுவனங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது. லக்சல நிறுவனமும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்த நிலைமையின் கீழ் லக்சல 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகள் முழுவதும் பாரிய கஷ்டங்களை எதிர் நோக்கியது. மாதாந்த தொழில்பாட்டு செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்கு போதுமான வருமானம் கிடைக்கப்பெறவில்லை. 2021 சனவரி தொடக்கம் ஏப்ரல் வரையிலான காலப் பகுதியில் அண்ணளவாக ரூபா.மில் 44.1 ஆன நன்கொடையுடன் பதவியணி சம்பளம் அடங்கலாக மாதாந்த தொழில்பாட்டு செலவினங்களுக்கான ஏற்பாடுகளை திறைசேரியின் ஊடாக வழங்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டது.

அதேபோன்று லக்சல வழங்குநர்களுக்கு தொடர்ச்சியாக 2 ஆண்டுகளின் பொருட்டு கிடைக்கப்பெறும் வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாமையால், 2021 யூன் மாதம் நிலுவை வழங்குநர்களின் ஒரு பகுதியினறுக்கு சீராக்கள்களை மேற்கொள்வதற்கு பொது திறைசேரி ரூபா.மில்லியன் 38.6 ஆன நன்கொடையை வழங்கியது.

COVID – 19 லக்சல விற்பனை வருமானத்தில் ஏற்படுத்திய தாக்கம் பின்வரும் வரைப்படத்தில் காண்பிக்கப்படுகிறது.

விற்பனை முன்னேற்றம் (2008 - 2021




லக்சலவின் விறபனை வருமானம் முன்னரான ஆண்டில் ரூபா.மில்லியன் 194 தொடக்கம் **2021** ஆம் ஆண்டில் ரூபா.மில். 137 வரை பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், அது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 29% ஆன வீழ்ச்சியடைதலாகும். ஆகக் குறைந்த மட்டத்தில் செயற்படினும், நிருவாக செலவினம் ரூபா.மில். 187 ஆகும். விநியோகச் செலவினம் ரூபா.மில். 8 ஆகியதுடன், 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 56% ஆன கவனிக்கத்தக்க அளவிலான குறைவடைதலாகும். காட்சிக்கூடங்களை மூடுதல் மற்றும் கைப்பணி உற்பத்திகள் கொள்வனவு செய்தல் குறைவடைவதால் 2021 ஆம் ஆண்டில் விநியோகச் செலவினம் 50% ஆல் குறைவடைந்துள்ளது.

**இலங்கை கைப்பணிகள் சபை**

**விரிவான வருமானம் தொடர்பான கூற்று**

**2021 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்காக**

| | குறிப்பு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | **3** | 137,495,835 | 194,740,004 |
| விற்பனை விலை | | (70,979,440) | (85,307,833) |
| **மொத்த இலாபம்** | | **66,516,395** | **109,432,171** |
| கிடைக்கப்பெற்றுள்ள நன்கொடை | | 82,905,000 | 21,466,252 |
| ஏனைய வருமானம் | **4** | 29,392,750 | 6,818,812 |
| நிருவாக செலவினம் | **5** | (187,070,962) | (188,621,582) |
| விநியோகச் செலவினம் | **6** | (8,239,659) | (17,834,739) |
| **தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து விளைவுகள்** | | **(16,496,476)** | **(68,739,086)** |
| நிதிசார் செலவினம் | **7** | (42,050,371) | (37,004,985) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **(58,546,847)** | **(105,744,071)** |
| வரி | **8** | **-** | **-** |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **(58,546,847)** | **(105,744,071)** |

**இலங்கை கைப்பணிகள் சபை**
**நிதி நிலைமை தொடர்பான கூற்று**
**2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக**

| | குறிப்புக | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 09 | 829,595,922 | 897,120,392 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | 829,595,922 | 897,120,392 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| இருப்பு | 10 | 545,265,950 | 619,209,585 |
| வியாபார மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள் | 11 | 106,938,043 | 71,085,017 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 12 | 37,790,147 | 28,002,906 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | 689,994,140 | 718,297,508 |
| **மொத்த சொத்துக்கள்** | | 1,519,590,062 | 1,615,417,900 |
| **உரித்துகள் மற்றும் பொறுப்புகள்** | | | |
| **உரித்துகள்** | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | | 69,628,878 | 69,628,878 |
| மூலதன ஒதுக்கங்கள் | | 510,806 | 510,806 |
| மீள் கணிப்பீட்டு ஒதுக்கங்கள் | | 454,366,157 | 454,366,157 |
| மூலதன அளிப்புகள் | | 107,951,172 | 107,951,172 |
| பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட உழைப்புகள் | | (184,017,430) | (125,845,784) |
| **மொத்த உரித்துகள்** | | 448,439,584 | 506,611,229 |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| ஓய்வூதிய நலன்களின் பொறுப்புகள் | 13 | 56,925,460 | 56,203,979 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 14 | 24,164,714 | 49,504,712 |
| நீண்டகால கடன் | 15 | 383,781,882 | 385,279,409 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | 464,872,056 | 490,988,100 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள் | 16 | 482,273,952 | 522,556,559 |
| செலுத்தப்பட வேண்டிய வருமான வரி | 8 | 21,798,486 | 20,811,536 |
| குறுகிய கால கடன் | 17 | 101,219,872 | 69,096,784 |
| வங்கி மேலதிக பற்று | 18 | 986,112 | 5,353,692 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | 606,278,422 | 617,818,571 |
| **மொத்த பொறுப்புகள்** | | 1,071,150,478 | 1,108,806,671 |
| **மொத்த உரித்துகள் மற்றும் பொறுப்புகள்** | | 1,519,590,062 | 1,615,417,900 |

.............................................
திரு.ஈ.ஏ.டெலிகன்
**பணிப்பாளர் (நிதி) (ப.க)**

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுகளில் கட்டாயமான அம்சமாகும். இந்த நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு கூறுகின்றது. பணிப்பாளர் சபையால் நிதிக் கூற்றுகள் அங்கீகரிக்கப்பட்டதுடன், அவர்களின் பொருட்டு 05.09.2022 ஆம் திகதி லக்சல, தும்முல்லவில் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் கையொப்பமிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| ...................................... | ............................ | ...................................... |
| திரு.எஞ்.எம்.கொடிக்கார | திருமதி என்.பீ.ஏ.ஆர். ஜயவர்தன | திரு.லக்மால் விக்கிரமஆரச்சி |
| **சபை உறுப்பினர்** | **சபை உறுப்பினர்** | **தலைவர்** |

**இலங்கை கைப்பணிகள் சபை**
**2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக**
**உரித்துகள் மாற்றமடைதல் தொடர்பான கூற்று**

| | வெளியிடப்பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கங்கள் | மீள்கணிப்பீட்டு ஒதுக்கங்கள் | மூலதன அளிப்புகள் | பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட | மொத்த உரித்துகள் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **2020 சனவரி 01 ஆந் திகதியில் மீதி** | 69,628,878 | 510,806 | 454,366,157 | 107,951,172 | (18,714,487) | **613,742,526** |
| | | | | | | - |
| முன்னரான ஆண்டின் பிழைகளுக்கான சீராக்கங்கள் | - | - | - | - | (1,387,226) | **(1,387,226)** |
| ஆண்டுக்கான இலாபம் | | | | | (105,744,071) | **(105,744,071)** |
| **2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **69,628,878** | **510,806** | **454,366,157** | **107,951,172** | **(125,845,784)** | **506,611,229** |
| முன்னரான ஆண்டின் பிழைகளுக்கான சீராக்கங்கள் | | | | | 375,201 | **375,201** |
| | | | | | | - |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | | (58,546,847) | **(58,546,847)** |
| | | | | | | - |
| **2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **69,628,878** | **510,806** | **454,366,157** | **107,951,172** | **(184,017,430)** | **448,439,584** |

**இலங்கை கைப்பணிகள் சபை**
**காசுப் பாய்ச்சல் கூற்று**
**2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக**

| | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|
| **தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகிய காசுப் பாய்ச்சல்கள்** | | ரூபா | ரூபா |
| வரிக்கு முன்னரான இலாபம் | | **(58,546,847)** | **(105,744,071)** |
| **சீராக்கல்** | | | |
| பணிக்கொடை மீதி சீராக்கல் 2020 | | (1,393,899) | - |
| கட்டிடங்களின் அபிவிருத்தி சீராக்கல் 2020 | | 277,696 | - |
| ஓய்வூதிய நலன்களின் பிணைப்புகள் | | 3,682,500 | 7,129,839 |
| வட்டி செலவினம் | | 41,938,619 | 36,856,652 |
| தேய்மானம் | | 26,440,306 | 26,414,467 |
| மூலதன செலவினத்தின் கடன் தீர்ப்பு செய்தல் | | 25,590,164 | 25,600,365 |
| முன்னரான ஆண்டின் சீராக்கல் | | 375,201 | (1,387,226) |
| கடன் தீர்ப்பு அளிப்புகள் | | (25,340,004) | (25,340,000) |
| | | **13,023,737** | **(36,469,974)** |
| **செயற்பாட்டு மூலதனத்தின் மாற்றங்கள்** | | | |
| இருப்புகள் | | 73,943,636 | 18,220,995 |
| வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள் | | (35,853,026) | 15,275,152 |
| வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள் (வரிகளுடன்) | | (39,295,657) | 20,912,419 |
| **தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தி செய்த காசுப் பாய்ச்சல்** | | **11,818,689** | **17,938,592** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | (1,567,120) | (1,821,898) |
| **செலுத்திய வட்டி** | | (41,938,619) | (36,856,652) |
| **தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகிய தேறிய காசுப் பாய்ச்சல் கூற்று** | | **(31,687,050)** | **(20,739,958)** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகிய காசுப் பாய்ச்சல்** | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | | 15,216,310 | (1,869,331) |
| **முதலீட்டு செயற்பாடுகளின் பொருட்டு செலவிடப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்** | | **15,216,310** | **(1,869,331)** |
| **நிதி செயற்பாடுகளில் இருந்து உற்பத்தியாகிய காசுப் பாய்ச்சல்** | | | |
| நீண்டகால / குறுகியகால கடன் எடுத்தல் | | 115,135,218 | 26,707,791 |
| கடன் மீள செலுத்தல் | | (84,509,657) | (4,058,524) |
| **நிதி செயற்பாடுகளுக்கு செலவிடப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்** | | **30,625,561** | **22,649,267** |
| **காசும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பும்/குறைவடைதலும்)** | | **14,154,821** | **39,979** |
| ஆண்டு ஆரம்பத்தின் காசும் காசுக்கு சமமானவைகளும் | | 22,649,214 | 22,609,235 |
| **ஆண்டு இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும்** | | **36,804,035** | **22,649,214** |
| வங்கி மேலதிக பற்று | **18** | (986,112) | (5,353,692) |
| கையிருப்பு மற்றும் வங்கியில் உள்ள பணம் | **11** | 37,790,147 | 28,002,906 |
| | | **36,804,035** | **22,649,214** |

# இலங்கை கைப்பணிகள் சபை
# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. நிறுவனத் தகவல்கள்

### 1.0 கம்பனி

"லக்சல" எனும் வர்த்தக குறியீட்டின் கீழ் பிரபல்யமடைந்து செயற்பட்டுவரும் இலங்கை கைப்பணிகள் சபை ("இலங்கை கைப்பணிகள் சபை" (SLHB) அல்லது "லக்சல") இலங்கை முழுவதும் தயாரிக்கப்படுகின்ற கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபடும் ஒன்றே ஒரு அரச நிறுவனமாகும்.

### 1.1 பிரதான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் இயல்பு

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு பரிசுப் பொருட்களையும் நினைவுப் பொருட்களையும் விற்பனை செய்தல், சபையின் பிரதான தொழில்பாடு ஆகும்.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.0 அளவீடுகளின் அடிப்படை

சபையின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதி நிலைமை தொடர்பான கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்கு முதலீடுகளின் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கணக்கீட்டு கொள்கை கூற்றுகள் என்பன, இலங்கைப் பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRSs) ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ளன.

பொதுவான மதிப்பின் பிரகாரம் அளவீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தவிர்ந்த, இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கமைவாக, நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளை பயன்படுத்தல் அவசியமாகும். அனைத்து பெறுமதிகளும் இலங்கை ரூபாக்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 2.1 கணக்கீட்டு மதிப்பீடுகள், கருதுகோள்கள் மற்றும் முடிவுகளை செயற்படுத்தல்

கொள்கைகள் மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பெறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினக் கூற்று. கொள்கைகளை ஏற்புடையதாக கொள்வதற்கு ஏதுவாக அமைகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல், LKAS (இலங்கை கணக்கீட்டு நியமங்கள்) மற்றும் SLFRS இற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடுகள் மற்றும்

எடுகோள்கள் நிலவிய சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதென நம்பிக்கை கொள்ளும் வரலாற்று ரீதியான அனுபவங்கள் மற்றும் பல்வேறுபட்ட காரணிகள் மீது அமைந்துள்ளது. அதன் பெறுபேறுகள் ஏனைய மூலாதாரங்களிலிருந்து தெளிவாக மாறுபடாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை முன்னெடுத்துச் செல்லும் பெறுமாணங்கள் மீது தீர்மானமெடுக்கும் அடிப்படையில் அமைக்கப்படுகின்றது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து மாறுபடக்கூடும். மதிப்பீடுகள் மற்றும் விசேட கருதுகோள்கள் நிலவும் அடிப்படையின் மீது மீளாய்வு செய்யப்படும். மதிப்பீடுகள், கணக்கு வைக்கும் திருத்தங்கள் என்பன மதிப்பீடுகள் திருத்தப்படும் போது இனம் காணப்படும். அவ்வாறு செய்வதன் மூலம் அத்தகைய திருத்தங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது திருத்தப்படும் காலத்திற்கு மாத்திரம் தாக்கத்தைச் செலுத்தக்கூடியதாக இருப்பின் மட்டுமே அத் திருத்தம் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

## 2.2 தொடர்ச்சியான இறுப்பை நிச்சயித்தல்

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது எதிர்காலத்தின் நிலையான இருப்பை மேன்மேலும் தக்கவைத்துக் கொள்வதற்கு சபையினது சொத்துக்களின் மதிப்பீடொன்று எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்கால தகவல்கள் அனைத்தையும் கருத்திற்கொள்ளும் போது வியாபாரத்தை மூடிவிடுவதற்கோ நிறுத்துவதற்கோ நாம் எதிர்வுகூறமாட்டோம்.

## 2.3 ஒப்புநோக்கப்படட தகவல்கள்

சபையினால் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கும் ஏற்புடையதாவதுடன், அவற்றை நியாயமாக முன்வைப்பதற்கு தேவையான சந்தர்ப்பங்களில் மீள்வகையீடு செய்யப்பட்டுள்ளன.

## 2.4 விசேட கணக்கியல் கொள்கைகள் தொடர்பான பொழிப்பு

பின்வரும் கணக்கியல் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் எல்லா காலவெல்லைகளுக்கும் தொடர்ச்சியாக இயைபுடையதாக்கிக் கொள்ளப்பட்டுள்ளதோடு அவற்றை பணிப்பாளர் சபையினாலும் மிக சாமர்த்தியமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.4.1 வருமானம் இனம்காணல்

பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனத்தை நோக்கி வரும் எனவும். அந்த வருமானம் நம்பிக்கைத் தரக்கூடிய வகையில் அளவீடு செய்ய முடியும் எனவும் கருத்திற்கொண்டு வருமானம் இணங்காணப்படுகின்றது. பெறப்பட்ட அல்லது வருமதியாக உள்ள தொகை அடிப்படையில் சாதாரணப் பெறுமதிக்கு வருமானம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அன்றேல் அது வியாபாரக் கழிவுகள் மற்றும் ஏற்புடைய வரி

சேர்க்கப்படாத கிடைக்க வேண்டிய வருமதிகள் என கணக்கிடப்படும்.

வெளிநாட்டு நாணயங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் கட்டுப்படுத்தப்படும் நாணயமாற்றுக் கொள்கையின் அடிப்படையில் மாற்றப்படும்.

ஐந்தொகை தினத்தில் வெளிநாட்டு நாணயங்கள் அடிப்படையில் வகையீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக அன்றைய தினத்தில் காணப்படும் நாணய மாற்று வீதத்தின் கீழ் இலங்கை ரூபாய்களுக்கு மாற்றீடு செய்யப்படும்.

### 2.4.2 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

(அ) **அடையாளம்காணல் மற்றும் அளவிடுதல்**

சொத்துக்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனியை நோக்கி வரும் என அனுமானித்து மற்றும் சொத்துக்களின் செலவினத்தை நம்பிக்கையுடன் அளவிட முடியும் என்றிருப்பின் மாத்திரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் பொறிகளை இனம்காணும் செயன்முறை ஏற்றுக்கொள்ளப்படும்.

காணிகள் தவிர்ந்த சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட குறைபாடுகளின் நட்டங்கள் கழிக்கப்பட்ட செலவுகளின் பெறுமதிக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்களை கைப்பற்றல் தொடர்பான நேரடியாக பிரயோகிக்க முடியுமான செலவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. செலவுப் பொருட்கள், நேரடி, உழைப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் உபயோகத்திற்காக ஏதேனும் சாதகமான நிலமைக்கு சொத்துக்களை கொண்டு செல்வதற்கு நேரடியாக பிரயோகிக்க முடியுமான ஏதேனும் செலவு மற்றும் அவ்வாறான சொத்துக்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்தளத்தில் உள்ள பொருட்கள் எதனையும் கலற்றி பாகப்படுத்தல் அல்லது அகற்றல் அல்லது அவற்றை மீள்நிலைப்படுத்தல் செலவுகள் சுய நிர்ணய சொத்துக்களுக்குள் அடங்கும். சொத்துகள், உபகரணங்கள் மற்றும் பொறிகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட ஏதேனுதொரு பொருள் வெவ்வேறான பிரயோசனங்கள் அடிப்படையில் அவற்றின் ஆயுட்காலம் பிரதான பாகங்களோடு தொடர்புபடுகின்ற போது அவை தனியான சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்ற அடிப்படையில் கணக்கிடப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி ஏதேனும் நிகழ்வுகள் அல்லது மறைமுகமான காரணிகளின் வித்தியாசங்களுக்கு அமைய மீண்டும் அறவீடு செய்ய முடியாதென தெளிவாகும் போது அந்த சொத்துக்கள், பொறித் தொகுதிகள்

மற்றும் உபகரணங்கள் முன்கொண்டு செல்லப்பட்ட பெறுமதி பலவீனமாகக் கருதி மீளாய்வுக்கு உட்படுத்தப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அகற்றலின் போது கிடைக்கப்பெறும் இலாபம் அல்லது நட்டம் அத்தகைய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்வற்றுக்கு ஏற்புடைய முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் அதன் அகற்றலின் மீது பணத்தொகையுடன் சீறாக்கம் செய்து உறுதிப்படுத்திக் கொள்வதோடு அவை விரிவான வருமான கூற்றில் அடையாளம் காணப்படும்.

சிறு கைத்தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் 1993 ஆம் ஆண்டில் கைப்பணிகள் தொழில் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்குள் ரூபா.112,330,000/= பெறுமதியான 11 சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2012-2013 ஆண்டில் SLHB நிறுவனம் மறுசீரமைக்கையில் ரூபா.20,700,000/= பெறுமதியான மூன்று (3) சொத்துக்கள் அமைச்சரவை தீர்மனாம் மூலம் தேசிய அருங்கலைகள் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், எஞ்சியவற்றை SLHB ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(ஆ) தேய்மானம்**

தேய்மானத்திற்கான ஒதுக்கீடுகள் கணக்கிடப்படுவது, ஏற்புடைய கணக்கு பெறுமதிகள் அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட ஆயுட்காலம் முழுவதையும் பதிவழிக்கும் நோக்கத்துடன் சொந்தமான காணிகள் தவிர்ந்த ஏனைய சகல சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் செலவுகளின் மீது இலகு நேர்கோட்டு வழிமுறையை கையாண்டேயாகும்.

பயன்படுத்தப்பட்ட பிரதான வருடாந்த வீத அளவுகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | கட்டிடம் | 2.5% |
| 2. | இயந்திரங்களும் உபகரணங்களும் | 10% |
| 3. | பதியப்பட்டுள்ள பொருட்கள் | 10% |
| 4. | தளபாடங்களும் பொருத்திகளும் | 10% |
| 5. | கணினி வன் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 20% |

- 2018 ஆம் ஆண்டு வரை கணினி உருப்படிகளின் தேய்மானம் இலகு நேர் கோட்டு முறை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் இந்த உருப்படிகள் 08 ஆண்டுகளுக்கு முன்பாக கொள்வனவு செய்துள்ளதால் இலகு நேர் கோட்டு முறை

கணக்கிடுகையில் தேய்மானத்தின் பெறுமதி, சேர்க்கப்பட்ட மொத்த பெறுமதி விஞ்சி செல்வதால் 2019 ஆம் ஆண்டில் குறைந்து செல்லும் முறையை லக்சல பயன்படுத்த நேரிட்டது. அதன் மூலம் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் குறைந்து செல்லும் மீதி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

(இ) **சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபம் / நட்டம்**

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அகற்றுதல் மூலம் கிடைக்கப்பெறும் இலாபம்/நட்டம் என்பவற்றை ஏற்புடைய விற்பனை நிகழும் காலப்பிரிவில் இனங்காணப் படுவதோடு வேறு செயற்பாட்டு வருமானங்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

(ஈ) அளிப்புகளின் கடன்தீர்ப்பு விகிதாசாரம் மற்றும் கட்டிடங்களின் அபிவிருத்தி செலவினங்களின் தேய்மானம் ஊடாக இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு அத்தியாவசியமற்ற வருமானம் அல்லது செலவினம் ஏற்படுதலை தவிர்க்கும் வகையில் கடன்தீர்ப்பு விகிதாசாரம் மற்றும் கட்டிடங்களின் அபிவிருத்தி செலவினம், தேய்மானம் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**2.4.3 மேற்கொள்கின்ற மூலதன வேலைகள்**

வருடத்திற்குள் பூரணப்படுத்தாத மூலதன செலவுகள் முற்பண கொடுப்பனவுகளாக குறிப்பிடப்படுவதோடு, வருடத்தினுள் நிறைவு செய்யப்பட்ட பயன்பாட்டுக்கு எடுத்துக்கொண்ட மூலதனச் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கிற்கு மாற்றப்படும்.

**2.4.4 புலனாகாத சொத்துக்கள்**

SLHB சபையினால் கையகப்படுத்திய பிரயோசனமான நிலையான ஆயுட் காலத்தைக் கொண்ட புலனாகாத சொத்துக்கள், ஒன்றுதிரட்டப்பட்ட கடன்தீர்ப்பு மற்றும் ஒன்றுதிரட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் நட்டங்களுக்கான செலவுகளின் மீது அளவிடப்படும்.

**(அ) அடையாளம் காணும் அடிப்படை**

புலனாகாத சொத்துக்களை சொத்துக்களுக்காக பிரயோகிக்க முடியுமான எதிர்கால பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனங்களுக்கு பாய்ச்சப்படும் என்றும் ஏற்புடைய செலவுகள்

திரண்ட குறைபாடுகள், நட்டங்கள் குறை செலவுகள் மீது நம்பிக்கையாக அளவீடு செய்து முன்னெடுத்துச் செல்ல முடியுமென அனுமானிக்கும் சந்தர்ப்பங்களிலுமே அடையாளம் காணப்படுகின்றன.

**(ஆ) பிந்திய செலவுகள்**

காலம் கடந்த செலவுகள் மற்றும் குறிப்பிட்ட சொத்துக்களின் எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஏற்புடைய பிந்திய செலவுகள் மூலதனமாக்கப்படுகின்றன. உள்ளக ரீதியாக ஏற்படுத்தப்படும் நற்பெயருக்கு மற்றும் மதிப்புக்கு ஏற்புடைய செலவுகளும் உட்பட பிற அனைத்து செலவுகளும் செய்யப்படும் எனும் கருதுகோளின் அடிப்படையில் வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது.

(இ) நீக்கல் மற்றும் அகற்றுதல்

புலனாகாத சொத்துக்களை அகற்றும் போது அல்லது பாவனையின் பின்னர் அகற்றும் போது எதிர்கால பொருளாதார நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாத போது அவை புலனாகாத சொத்துக்கள் என அடையாளம் காணப்படும்.

(ஈ) கடன் தீர்ப்புச் செய்தல்

புலனாகாத சொத்துக்கள், அவை பாவனைக்கு எடுக்கப்பட்ட தினத்திலிருந்து அவற்றின் மதிப்பீட்டு பிரயோசனமுள்ள ஆயுட் காலத்திற்குள் எளிய நேர்கோட்டு வழிமுறைக்கு அமைய வருமான கூற்றுக்குள் அடையாளம் காணப்படும்.

### 2.4.5 பொருளழிவு

சபைக்குள்ள சொத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் கணக்கு அளவுகள், ஏதேனும் சொத்தில் (SLHB) பொருளழிவு அவதானிக்கப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு ஐந்தொகை தினத்திலும் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறான பொருளழிவு தென்படுமாயின் ஏற்புடைய சொத்திலிருந்து மீள அறவிடமுடியுமான பெறுமதியை மதிப்பீடு செய்யப்படும். ஏதேனும் பொருளழிவு நட்டமொன்று அவதானிக்கப்படுவது ஏதேனும் சொத்தின் கொள்ளளவு பெறுமதி அல்லது அதன் பண உற்பத்தி பிரிவை மீண்டும் அறவிடுவதற்கு முடியுமான பெறுமதியை விஞ்சும் போதாகும். பொருளழிவு நட்ட வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும்.

### 2.4.6 வியாபார மற்றும் வேறு வருமதிகள்

வர்த்தக மற்றும் வேறு வருமதிகள் பொதுவான வியாபார காலத்திற்குள் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் அல்லது அவர்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுக்கு கிடைக்க வேண்டியுள்ள பணத்தொகைகளாகும். அவற்றை சேகரித்துக் கொள்வதற்கு ஒரு வருட காலம் அல்லது அதற்கு குறைவாக செலவாகும் என உத்தேசிக்கப்படுமிடத்து (பொதுவான வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளின் வட்டத்திற்குள் அதற்கு மேலான காலம் செலவாகும் எனின்) அவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறல்லாத போது அவை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

### 2.4.7 இருப்புகள்

பயன்படுத்தாத மற்றும் பழுதுபார்க்க முடியுமான வகைகளுக்கு ஏற்பாடுகள் செய்த பின்னர் பொருள் பட்டியல் செலவில் ஆகக் குறைந்த விலைக்கு மற்றும் தேறிய கண்டபலன் பெறுமதிக்கு கணக்கிடப்படும். தேறிய கண்டபலன் பெறுமதி என்பது சாதாரண வியாபார காலப்பிரிவுக்குள் பொருட்கள் பட்டியலை விற்பனை செய்ய முடியுமான விலை என்பதோடு நட்ட இருப்புக்கள் மற்றும் பழுதுபார்ப்பு இருப்புக்கள், இருப்புக்கள் அட்டவணையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

### 2.4.8 காசும் காசுக்கு சமமானவைகளும்

கையிருப்பு மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றின் பணிகளுக்காக பணப் பெறுமதியை அறிந்துகொள்வதற்கு இலகுவாக மாற்றீடு செய்ய முடியுமான குறுகியகால உயர் திரவத்தன்மையுள்ள முதலீடுகள் கையிருப்பு தொகை மற்றும் பணம் சார்ந்தவைகள் என வரைவிலக்கணம் செய்யப்படும். பணமும் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் என்பது கையிருப்புத் தொகை மற்றும் வங்கி மேலதிகப் பற்று தவிர்ந்த ஏனைய குறுகிய கால கடன் பெறுகைகள் மற்றும் குறுகிய கால முதலீடுகள் என்பன உள்ளடங்கும்.

### 2.4.9 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் எல்.கே.ஏ.எஸ். LKAS 07 (காசுப் பாய்ச்சல் கூற்று) ஏற்ப மறைமுகமான பயன்பாட்டின் ஊடாக தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.4.10 ஊழியர் நலன்கள்

**(அ) குறிப்பிட்ட நலத்திட்டம் - ஓய்வூதிய பணிக்கொடை**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் கீழ் ஓய்வூதிய நலன்களுக்கான முறிகளுக்காக 2021 ஆம் ஆண்டின் காலப் பகுதிக்குள் 118 ஊழியர்களை உள்ளடக்கிய குறிப்பிட்ட நலத்திட்டமாகும். இந்த திட்டத்தின் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் பொருட்டு ஆரம்ப வருடத்திலிருந்து முழுமையான ஒவ்வொரு வருடத்திற்கும் சகல ஊழியர்களினதும் நிதி ஆண்டின் இறுதி மாதத்தின் அரைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட பெறுமதிக்கு சமமான தொகை ஐந்தொகையில் ஓதுக்கீடொன்றாக முன்கொண்டு செல்லப்படுகிறது. வருட ஆரம்பத்திலிருந்து முன்கொண்டு வந்த ஒதுக்கீடுகளில் ஏற்படும் வித்தியாசத்தின் குறைபாடு தொடர்பாக விரிவான வருமானக் கூற்றில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஆ) குறிப்பிட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு உரிமைப் பெறுகின்றனர். ஊழியர்களின் நிகர சம்பளத்தின் அடிப்படையில் 12% உம் சபையினால் 3% ம் என்ற அடிப்படையில் முறையாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்யப்படும்.

### 2.4.11 கடன் பெற்றுக்கொள்ளல்

கடன் பெறுகைகள் அடிப்படையாக அடையாளம் காணப்படுவது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் செலவினம் அற்ற பொதுவான மதிப்பின் பிரகாரமாகும். எதிர் வரும் காலத்தில் விளைவுப் பயன் வட்டி முறையைப் பயன்படுத்தி தவணை முறைக் கடன் கரைப்பு செலவு அடிப்படையில் கடன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற தொகை கொடுக்கல் வாங்கல்களின் செலவினம் தவிர்ந்த மற்றும் விடுவித்துக்கொள்ளும் மதிப்புக்கு இடையில் காணப்படும் (தேறிய கொடுக்கல்வாங்கல் செலவு) ஏதேனும் வித்தியாசம் இருப்பின் அதனை கடன் பெறுகை காலத்திற்குள் வருமான கூற்றில் காட்டப்படும்.

### 2.4.12 பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

கடந்தகால நிகழ்வுகளின் பெறுபேறாக சட்டரீதியான / சம்பிரதாயபூர்வ முறியொன்று நடப்பு வருடத்தில் இருக்கும் போது பொறுப்புக்கள் மற்றும் ஓதக்கீடுகள் என்பன நிதிக்கூற்றுகளில் இனங்காணப்படும். அவ்வாறான முறிகளை தீர்ப்பதன் மூலம் பொருளாதார நலன்களை உள்ளடக்கிய

வளங்கள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடன் தருனர் ஒருவரினால் வேண்டுகோள் விடுக்கப்படும் போது அல்லது நிதிக் கூற்றுகள் தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய முறிகள் என்பன நிதிக்கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக குறிப்பிடப்படும். நிதிக்கூற்றுகள் தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் நிதி நிலைமை தொடர்பான விபரமான கூற்றில் நடைமுறையல்லாத பொறுப்பாக கணிக்கப்படும்.

(அ) **வியாபார மற்றும் வேறு செலுத்த வேண்டியவைகள்**

வர்த்தக செலுத்த வேண்டியவைகளாக சாதாரண வியாபார காலத்திற்குள் வழங்குநர்களுக்கு பொருட்களுக்கு அல்லது அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவை ஒன்றுக்கு செலுத்துவதற்குள்ள பொறுப்புக்களின் பெறுமதியாகும். அவை செலுத்தப்பட வேண்டிய காலம் ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவாக செலவாகும் என உத்தேசிக்கப்படுமிடத்து (பொதுவான வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது பொதுவான தொழில்பாட்டு சுற்றுக்குள்) அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறல்லாத போது அவை நடைமுறை சொத்துக்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

அனுப்பப்படும் இருப்புக்கள் உள்ளிட்ட அனைத்து கொள்வனவுகளுக்கும் பொருட்கள் கிடைக்கப்பெறுவதை பதியும் போது கணக்கேடுகளில் பொறுப்புக்களை அறிக்கையிடும் கொள்கை லக்சல நிறுவனத்தினால் பின்பற்றப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மொத்த கடன்கொடுநர்களிடம் உரிய இருப்புகள் விற்பனை செய்கின்ற போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**2.4.13 வருமான வரி**

தற்போதுள்ள வருமான வரி அறவிடுவது கணக்கிடப்படுவது கம்பனியினால் வரி வருமானத்தை செயற்படுத்தி உருவாக்கும் போது கம்பனியின் நிதி நிலமை பற்றிய கூற்றின் திகதிக்கு நாட்டில் அமுலிலுள்ள அல்லது போதியளவு விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைவாகும். பயன்படுத்தப்படும் வரிக் கட்டளைகளின் பொருள்கோடல்களுக்கு உட்பட்ட நிலமைகளுக்கு ஏற்புடையதாக வரி அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் முகாமைத்துவத்தினால் தவணை அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதோடு, வரி அதிகாரபீடங்களுக்கு செலுத்தவேண்டுமென உத்தேசிக்கப்படும் பணத் தொகையின் அடிப்படையில் ஒதக்கீடுகளும்

மேற்கொள்ளப்படும்.

**பொருட்கள் விற்பனை**

பொருட்கள் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம், பெறப்பட்ட மற்றும் பெறவேண்டிய தேறிய இலாபம், விற்பனை கழிவுகள் மற்றும் கொள்ளளவுகளின் சாதாரண பெறுமதிக்கு அளவிடப்படும். விசேட ஆபத்துக்கள் மற்றும் உரிமை நலன்கள் கொள்வனவு செய்பவருக்கு பொறுப்பளிக்கப்பட்டிருக்கும் போது, அறவிடுவதற்கு முடியுமாக உள்ள போது சார்புச் செலவு மற்றும் பொருட்கள் மீண்டுவரும் அறிக்கைகள் நம்பிக்கையாக மதிப்பீடு செய்ய முடியுமான சந்தர்ப்பத்தில் மற்றும் பொருட்கள் தொடர்பாக தொடர்ச்சியான முகாமைத்துவ தலையீடு இல்லாத போது வருமானம் அடையாளம் காணப்படும். ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளைப் பொறுப்பளித்தல் விற்பனை ஒப்பந்தத்தின் ஒவ்வொரு நிபந்தனைகளின் மீதும் தங்கி நின்று மாறுபடுகின்றது.

ஏனைய தொழில்பாட்டு வருமானம்

(அ) சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாப நட்டங்கள்

(ஆ) சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அகற்றுதல் மற்றும் நீக்குவதன் மூலம் கிடைக்கும் இலாபம் அல்லது நட்டங்கள் ஏற்புடைய விற்பனை நிகழும் காலப்பிரிவில் இனம்காணப்படுவதோடு அவை ஏனைய செயற்பாட்டு வருமானங்களாக வகைபடுத்தப்பட்டுள்ளன.

**கிடைக்கப்பெற்ற கொடைகள்**

அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடைகள் செலவின விடயத்திற்கு ஏற்புடையதாயின் அது செலவை சீராக்கம் செய்வதற்கு தேவையான காலப்பகுதியில் இழப்பீடு வழங்கப்படும் என்ற அடிப்படையில் இனம்காணப்படும். ஏற்புடைய கொடை சொத்தொன்றுடன் தொடர்புபடுமாயின் சாதாரண பெறுமதி பின்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் உத்தேச நடைமுறைக்கேற்ற ஆயுட்காலம் பூராகவும் சமமான தவணைக் கட்டணங்களில் வருமானக் கூற்றிற்கு செலுத்தப்படும்.

**கிடைக்கப்பெற்ற மூலதனக் கொடைகள்**

கிடைக்கப்பெற்ற மூலதனக் கொடைகள் பின்போடப்பட்ட வருமானங்களாக இனம்காணப்பட்டுள்ளதோடு 10 வருட காலப் பிரிவு பூராவும் கடன்தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

**கிடைக்கப்பெற்ற மீண்டுவரும் கொடைகள்**

வருமானம் மற்றும் ஏற்புடைய கொடைகள் ''வேறு வருமானங்களாக'' தனித்தனியாக அறிக்கையிடுவதற்கு அல்லது ஏற்புடைய வருமானங்கள் மூலம் அறவீடு செய்வதற்கும் முடியும்.

### 2.4.14 செலவுகளை இனம்காணல்

நிதிக் கூற்றுக்களில் செலவினங்கள் இனம்காணப்படுவது செய்யப்பட்ட செலவினம் மற்றும் குறிப்பிட்ட வருமான விடயங்களுக்கு இடையிலுள்ள உழைப்புக்கள் ஆகியவற்றுக்கு இடையிலுள்ள நேரடி தொடர்பின் அடிப்படையிலாகும். வினைத்திறனுடனான வியாபாரத்தைப் பேணிவருவம் போதும் சொத்துக்கள் ஆலைகள் மற்றும் பொறிகளை பராமரிக்கின்ற போதும் ஏற்படும் அனைத்து செலவினங்களும் வருமானக் கூற்றில் அறவீடுகளாக காட்டப்பட்டுள்ளது.

வருமானக் கூற்றை சமர்ப்பிக்கும் செயற்பாட்டுக்காக கம்பனியின் மற்றும் குழுமத்தின் செயலாற்றுகைக்கு உரிய அடிப்படைகள் அதன் மூலம் நியாயமாக எடுத்துக்காட்டப்படும் என்ற அடிப்படையில் ''செலவினத்தின் செயற்படுத்தல்'' முறை பின்பற்றப்பட்டுள்ளது.

**(அ) மீண்டுவரும் செலவுகள்**

வருமான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படி சபையினால் உழைக்கப்படும் இலாபம் யாதெனில், சகல அறிந்த பொறுப்புக்களுக்காக மற்றும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் முறையே தேய்வுக்கான ஒதுக்கீடுகளை வழங்கிய பின்னர் மீதமாகும் தொகையாகும்.

**(ஆ) மூலதனச் செலவுகள்**

வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவோ அல்லது வியாபாரத்தின் உழைப்புக் கொள்ளளவை உயர்த்துவதற்கு நிரந்தரமான நிலைமையை கொண்ட சொத்துக்களை விரிவுபடுத்துவதற்கோ அல்லது விருத்தி செய்வதற்காகவோ செலவிடப்பட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாக கொள்ளப்பட்டுள்ளன.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அகற்றும் போது கிடைக்கும் வருமானங்கள் எனும் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டம் என்ற ரீதியில் வருமான கூற்றினுள் கணக்கிடப்பட்டுள்ளது.

### 2.4.15 கடன் பெறுகை செலவுகள்

கடன் பெறுகைச் செலவுகள் அவை செலவிடப்படும் வருடத்தில் ஒரு செலவாக கணக்கிடப்படும்.

### 2.4.16 முறிகள் மற்றும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள்

சபையின் கட்டுப்பாட்டுக்கு வெளியே நடைபெறும் கடந்தகால நிகழ்வொன்று காரணமாக எழக்கூடிய நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் நிகழுதல் அல்லது நிகழாதிருத்தல் காரணமாக மாத்திரம் உறுதிப்படுத்தப்படும் மறைமுக சொத்துக்கள் மற்றும் முறிகள் நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள் ஆகின்றன.

### 2.4.17 ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் நிகழ்ந்தவை

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் நிகழும் சகல குறிப்பிடத்தக்க சம்பவங்களும் ஏற்புடைய சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டு செம்மையாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது.

## இலங்கை கைப்பணிகள் சபை
## நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| 3. வருமானம் | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **காட்சிகூடங்களின் விற்பனை** | | |
| தும்முல்லை | 53,131,642 | 79,691,725 |
| நூதனச்சாலை | 6,117,605 | 19,175,538 |
| காலி | 9,350,552 | 19,452,867 |
| பேராதனை | 6,432,911 | 16,075,609 |
| கட்டுநாயக்கா | 6,742,306 | 11,240,568 |
| கோட்டை | 9,736,767 | 10,143,012 |
| வெலிபென்ன 1 | 4,465,532 | 11,152,021 |
| பத்தரமுல்ல | 3,719,753 | 5,698,666 |
| கண்டி | 3,320,564 | 8,247,892 |
| கட்டுபெத்த | 4,318,325 | 5,017,082 |
| பின்னவல | 2,067,206 | 4,178,202 |
| நுவரெலியா | 1,343,977 | 1,818,842 |
| **மொத்த காட்சிகூடங்களின் விற்பனை** | 110,747,140 | 191,892,024 |
| நேரடி/வாடிக்கையாளர் விருப்பம் படி கட்டளைகள | 26,748,695 | 2,847,980 |
| | **137,495,835** | **194,740,004** |
| | - | - |
| | **137,495,835** | **194,740,004** |

| 4. ஏனைய வருமானம் | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வாடகை வருமானம் | 3,910,627 | 5,883,099 |
| பிரதான கடன்தீர்ப்பு வருமானம் | 25,340,004 | |
| சேமிப்புக் கணக்கின் வட்டி | 66,412 | 81,044 |
| அந்நியச் செலாவணி இலாபம் | 75,707 | 854,669 |
| | **29,392,750** | **6,818,812** |

**இலங்கை கைப்பணிகள் சபை**
**நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| **5. நிருவாக செலவினம்** | குறிப்புகள் | **2021** | | **2020** | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா. | |
| சம்பளம் மற்றும் படிகள் | | 66,552,828 | | 69,534,613 | |
| ஊக்குவிப்பு படி | | 96,000 | | - | |
| ஊ.ந.பொ.நி. முற்றும் ஊ.சே.நிதியம். (E.P.F. & E.T.F.) | | 9,593,951 | | 9,886,048 | |
| பணிக்கொடை | | 3,682,500 | | 7,129,839 | |
| போக்குவரத்து படி | | 5,276,175 | | 4,965,599 | |
| பணிப்பாளர்களின் கட்டணங்கள் மற்றும் சபை கூட்டங்களுக்கான செலவினம் | | 467,482 | | 548,939 | |
| கணக்காய்வு கட்டணங்கள்/தொழில்சார் கட்டணங்கள் | | 1,219,200 | | 1,410,000 | |
| சட்டக் கட்டணங்கள் | | 155,000 | | 135,800 | |
| பாதுகாப்பு கட்டணங்கள் | | 5,399,593 | | 11,184,146 | |
| வாடகை மற்றும் வரிபணம் | | 12,056,104 | | 16,467,874 | |
| மின்சாரம் | | 7,741,522 | | 10,687,551 | |
| தேய்மானம் | | 26,440,306 | | 26,414,467 | |
| கட்டிடங்களின் அபிவிருத்தி கடன்தீர்த்தல் -Exp | | 25,590,164 | | | |
| துப்பரவேற்பாட்டு சேவைகள் | | 4,911,651 | | 4,927,744 | |
| ஏனைய பதவியணி செலவினம் * | **5.1** | 3,946,858 | | 3,810,173 | |
| ஏனைய தொழில்பாட்டு செலவினம் * | **5.2** | 13,941,628 | | 21,518,789 | |
| | | | **187,070,962** | | **188,621,582** |

**உப குறிப்புகள்**

| **ஏனைய பதவியணி செலவினத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. *** | **2021** | | **2020** | |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| மேலதிகம் | 283,127 | | - | |
| ஊழியர் நலனோம்பல் | 1,743,422 | | 2,582,908 | |
| பணப் பாதுகாப்பு வட்டி | 214,999 | | 212,241 | |
| பதவியணி பயிற்சி | - | | 29,000 | |
| மருத்துவ செலவினம் | 1,705,310 | | 986,024 | |
| VRS | - | | - | |
| | | **3,946,858** | | **3,810,173** |

**இலங்கை கைப்பணிகள் சபை**

**நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| **உப குறிப்பு 5.2** | **2021** ரூபா | | **2020** ரூபா | |
|---|---|---|---|---|
| **ஏனைய தொழில்பாட்டு செலவினத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. *** | | | | |
| | - | | - | |
| வியாபார அறிவிப்புகள் | 564,365 | | 324,924 | |
| அச்சீடு மற்றும் எழுதுகருவி | 1,032,132 | | 1,146,501 | |
| பத்திரிக்கை மற்றும் வார சஞ்சிகைகள் | - | | 7,590 | |
| அஞ்சல் கட்டணங்கள் / தொலைபேசி/டெலெக்ஸ் | 9,070,246 | | 11,029,945 | |
| எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 704,042 | | 595,729 | |
| இருப்புகளின் ஒப்பாய்வு | 175,374 | | 210,356 | |
| வியாபார அனுமதிப்ப பத்திர கட்டணங்கள் | - | | 252,720 | |
| கணினி செலவினம் | 260,890 | | 170,005 | |
| காப்புறுதி | 55,764 | | 278,607 | |
| நீர் கட்டணம் | 337,721 | | 368,221 | |
| பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு கட்டிடம் | 1,246,317 | | 1,322,226 | |
| பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு - இயந்திர உபகரணங்கள் | 223,081 | | 1,272,935 | |
| வாகனங்களை வாடகைக்கு வழங்கும் கட்டணங்கள் | - | | 3,025,968 | |
| அளிப்புகள் மற்றும் கட்டிடங்களின் கடன்தீர்ப்பு தேறிய -வேறுபாடு | | | 260,365 | |
| சலுகை கட்டணங்கள் | 266,571 | | 1,197,707 | |
| திறப்பு விழா செலவினம் | - | | 49,734 | |
| முத்திரை கட்டணங்கள் | 5,125 | | 5,256 | |
| | | **13,941,628** | | **21,518,789** |

| **6. விநியோகச் செலவினம்** | குறிப்புகள் | **2021** | **2020** |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| ஆலோசனை கொமிஸ் | | 2,146,897 | 12,089,387 |
| கிரெடிட் காட் கொமிஸ் | | 1,386,182 | 2,415,398 |
| பொதி பொருட்கள் உள்நாட்டு | | 749,333 | 1,157,820 |
| தொழில்முயற்சிகளின் மேம்பாடு | | 557,062 | 356,236 |
| பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு - பொருட்களை கொள்வனவு செய்தல் | | 114,993 | 102,760 |
| கணகாட்சி மற்றும் வர்த்தக கண்காட்சி | | 868,000 | - |
| பொருட் போக்குரவத்து | | - | 79,300 |
| பிரயாணச் செலவினம் | | 1,144,457 | 1,038,372 |
| மதிப்பீட்டு செலவினம் | | 1,010,149 | 77,420 |
| காப்புறுதி மற்றும் பொருட் போக்குவரத்து கட்டணங்கள் | | 171,103 | 161,511 |
| விசேட கட்டளைச் செலவினம் | | 91,483 | 356,535 |
| | | **8,239,659** | **17,834,739** |

| | **2021** | **2020** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **7. நிதிசார் செலவினம்** | | |
| வங்கி கட்டணங்கள் | 111,752 | 148,333 |
| கடன் வட்டி - இலங்கை வங்கி | 26,703,053 | 27,033,067 |
| - பி.அ.வங்கி | 15,235,566 | 9,823,585 |
| | **42,050,371** | **37,004,985** |

**8. வரி**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செலுத்தப்பட வேண்டிய பணத்தொகை கடந்த ஆண்டுகளில் சேர்ந்துள்ளவைகள் ஆவதுடன், அவை சபை எதிர்நோக்கிய நிதிக் கஷ்டங்கள் காரணமாக தீர்க்கப்படவில்லை. 2020 ஆம் ஆண்டு தொடக்கம், சபை வரி சட்டங்களுக்கு ஒழுங்கமையும் பொருட்டு ஒழுங்குமுறையில் வரி செலுத்தலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 09. சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| சொந்தமான ஆதனங்கள் | 9.1 | 656,565,972 | 698,222,588 |
| கட்டிடங்களின் அபிவிருத்தி செலவினம் | 9.2 | 173,029,950 | 198,897,809 |
| | | **829,595,922** | **897,120,397** |

### 9.1 சொநதமான ஆதனஙகள

| | காணிகள் | கட்டிடங்கள் | பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | தளவாடங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் | கணினி உபகரணங்கள் | கடிதங்கள் | மென் பொருள் | மேற்கொள்கின்ற மூலதன நடவடிக்கைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **செலவினங்கள் அல்லது மதிப்பீடு** | | | | | | | | | |
| **2020 சனவரி 01 ஆம் திகதியில் மீதி** | 396,037,214 | 248,797,761 | 100,796,761 | 60,158,229 | 33,337,166 | 32,543,373 | - | 45,451,390 | **917,121,895** |
| சேர்க்கை | | - | 110,730 | 21,500 | 75,150 | 855,985 | - | - | **1,063,365** |
| **2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **396,037,214** | **248,797,761** | **100,907,491** | **60,179,729** | **33,412,316** | **33,399,358** | - | **45,451,390** | **918,185,259** |
| சீராக்கல் | (15,248,575) | | | | (10,193,250) | | 10,193,250 | | **(15,248,575)** |
| சேர்க்கை | - | - | - | - | - | 32,265 | - | - | **32,265** |
| **2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **380,788,639** | **248,797,761** | **100,907,491** | **60,179,729** | **23,219,066** | **33,431,623** | **10,193,250** | **45,451,390** | **902,968,949** |
| **தேய்மானம்** | | | | | | | | | |
| **2020 சனவரி 1 ஆம் திகதியில் மீதி** | - | 40,051,629 | 63,125,827 | 40,470,927 | 29,974,352 | 19,925,470 | - | - | **193,548,205** |
| ஆண்டுக்கான அறவிடல் | - | 6,203,277 | 10,089,826 | 6,016,898 | 781,157 | 3,323,308 | - | | **26,414,466** |
| **2020திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | | **46,254,906** | **73,215,653** | **46,487,825** | **30,755,509** | **23,248,778** | - | | **219,962,671** |
| சீராக்கல் | | | | | (10,193,250) | | 10,193,250 | | **-** |
| ஆண்டுக்கான அறவிடல் | - | 6,203,277 | 10,090,749 | 6,017,973 | 787,923 | 3,340,384 | - | | **26,440,306** |
| **2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | - | **52,458,183** | **83,306,402** | **52,505,798** | **21,350,182** | **26,589,162** | **10,193,250** | - | **246,402,977** |
| **முன்கொண்டு வரப்பட்ட அளவுகள்** | | | | | | | | | |
| 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி | 396,037,214 | 202,542,855 | 27,691,838 | 13,691,904 | 2,656,807 | 10,150,580 | - | 45,451,390 | 698,222,588 |
| **2021 திசெம்பர் 31 ஆம் திகதியில்** | **380,788,639** | **196,339,578** | **17,601,089** | **7,673,931** | **1,868,884** | **6,842,461** | - | **45,451,390** | **656,565,972** |

### 9.2 கட்டிடங்கள் மற்றும் அபிவிருத்தி செலவினம்

| | 2021 | 2020 |
|---|---|---|
| **செலவினம் அல்லது கவனத்தில் கொள்ளப்பட்ட செலவினம்** | ரூபா | ரூபா |
| சனவரி 01 ஆம் திகதியில் மீதி | 387,252,019 | 386,446,053 |
| மேலதிகம் | | 805,966 |
| மூ சீராக்கப்பட்ட | (297,752) | |
| **திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **386,954,267** | **387,252,019** |
| **கடன் தீர்ப்பு** | | |
| சனவரி 01 ஆம் திகதியல் மீதி | 188,354,210 | 162,753,845 |
| ஆண்டுக்கான அறவிடல் | 25,590,164 | 25,600,365 |
| மூ சீராக்கப்பட்ட | (20,056) | |
| **திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **213,924,317** | **188,354,210** |
| **திசெம்பர் 31 ஆம் திகதியில் முன்கொண்டு வரப்** | **173,029,950** | **198,897,809** |

இலங்கை கைப்பணிகள் சபை
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

9.2 கட்டிடங்களுக்கான அபிவிருத்தி செலவினம் (தொடர்பு)

| கடன் தீர்ப்பு இடம் | ஆண்டு | மேற்கொண்ட செலவினம் | விகிதாசாரம் % இரண்டு தசமங்களுக்கு | 2021 சனவரி 01 ஆம் திகதியில் திரண்ட கடன் தீர்ப்பு | 2021ஆண்டில் கடன் தீர்ப்பு | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் திரண்ட கடன்தீர்ப்பின் மீதி | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் கொண்டு வரப்பட்ட கட்டிடங்களின் அபிவிருத்தி செலவின அளவு |
|---|---|---|---|---|---|---|---|
| நூலகம் | 2013 | 172,847,765 | | | | | |
| நூலகம் | 2014 | 1,881,295 | | | | | |
| நூலகம் | 2015 | 389,177 | | | | | |
| மொத்தம் | | **175,118,237** | 5.77% | 73,950,197 | 10,101,214 | 84,051,411 | 91,066,826 |
| பத்தரமுல்லை | 2013 | 117,704,905 | | | | | |
| பத்தரமுல்லை | 2014 | 7,119,771 | | | | | |
| பத்தரமுல்லை | 2015 | 9,744,207 | | | | | |
| மொத்தம் | | **134,568,883** | 5.77% | 55,598,522 | 7,762,237 | 63,360,759 | 71,208,124 |
| பின்னவளை | 2013 | **10,086,000** | 10.00% | 8,068,800 | 1,008,600 | 9,077,400 | 1,008,600 |
| வாகொல்ல | 2014 | **810,487** | 10.00% | 567,340 | 81,049 | 648,389 | 162,098 |
| பேராதெனிய | 2013 | 31,657,966 | | | | | |
| பேராதெனிய | 2014 | 8,968,353 | | | | | |
| பேராதெனிய | 2015 | 677,220 | | | | | |
| மொத்தம் | | **41,303,539** | 10.00% | 32,010,552 | 4,130,354 | 36,140,906 | 5,162,633 |
| வெலிபன்ன | 2013 | **10,269,019** | 10.00% | 8,215,217 | 1,026,902 | 9,242,119 | 1,026,900 |
| குதிரை போட்டி திடல் | 2013 | **1,113,613** | 10.00% | 890,887 | 111,361 | 1,002,248 | 111,365 |
| கட்டுநாயக்க | 2013 | **1,060,000** | 10.00% | 848,000 | 106,000 | 954,000 | 106,000 |
| உணவட்டுன | 2013 | **1,000,000** | 10.00% | 800,000 | 100,000 | 900,000 | 100,000 |
| K-Zone | 2013 | **8,353,071** | 10.00% | 6,682,453 | 835,306 | 7,517,759 | 835,312 |
| துன்முல்லை | | **769,781** | 10.00% | 461,875 | 76,977 | 538,852 | 230,929 |
| கண்டி | 2019 | 1,993,423 | | 199,342 | | | |
| | 2020 | 805,966 | | 61,024 | | | |
| சீராக்கப்பட்ட | 2020 | (297,752) | | (20,056) | | | |
| | | **2,501,637** | 10.00% | 240,310 | 250,164 | 490,474 | 2,011,163 |
| **முழு மொத்தம்** | | **386,954,267** | | **188,334,153** | **25,590,164** | **213,924,317** | **173,029,950** |

**இலங்கை கைப்பணிகள் சபை**

**நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| **10. பொருட் பதிவேடு** | குறிப்புகள் | **2021**<br>ரூபா | **2020**<br>ரூபா |
|---|---|---|---|
| காட்சி கூடங்களின் வியாபாரம் முதலாவது தரத்துடன் கூடிய முடிவுப் பொருட்கள் | | 394,180,031 | 469,284,075 |
| இரண்டாவது தரத்துடன் கூடிய முடிவுப் பொருட்கள் | | 150,731,992 | 148,076,152 |
| மூலப் பொருட்களுடன் மேற்கொள்கின்ற வேலைகள் | **10.1** | 353,927 | 1,849,358 |
| | | **545,265,950** | **619,209,585** |

**10.1 மூலப் பொருட்களுடன் மேற்கொள்கின்ற வேலைகள்**
மூலப்பொருட்கள் மற்றும் நடைமுறையிலுள்ள செயற்பாடுகள் நுகர்வோரின் விருப்புக்கமைவாக தயாரிக்கப்பட்ட நேரடி கட்டளைக்காக உற்பத்தி செய்யப்பட்ட உருப்படிகளை கொண்டமைந்திருக்கும்.

**SAP முறைமையில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக 2019/2020 ஆண்டில் விசேட கட்டளைகள் தவறுதலாக கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், இந்த கோளாறு 2021 ஆம் ஆண்டில் செவ்வையாக்கப்பட்டுள்ளது.

| | | **2021** | **2020** |
|---|---|---|---|
| **11. வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள்** | குறிப்புகள் | ரூபா | ரூபா |
| வியாபாரம் கிடைக்கப் பெற வேண்டியவைகள் | **11.1** | 27,661,720 | 8,851,463 |
| ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள் | **11.2** | 16,000,356 | 14,605,047 |
| வைப்புகள் மற்றும் முன்செலுத்தல்கள் | **11.3** | 63,275,967 | 47,628,507 |
| | | **106,938,043** | **71,085,017** |
| **11.1 வியாபாரம் கிடைக்கப் பெற வேண்டியவைகள்** | | | |
| வியாபார கடனாளிகள் | | 36,827,011 | 18,343,477 |
| சந்தேகத்திற்கிடமான கடனாளிகள் | **11.4** | (9,578,372) | (9,578,372) |
| கிடைக்கப் பெற வேண்டிய கடன் அட்டைகள் | | 413,081 | 86,358 |
| | | **27,661,720** | **8,851,463** |
| **11.2 ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள்** | | | |
| பணியாற் தொகுதியினரின் கடன் | | 332,500 | 897,500 |
| கிடைக்கப் பெற வேண்டிய வாடகை | | 12,562,954 | 4,625,800 |
| கிடைக்கப் பெற வேண்டிய ESC | | 3,110,010 | 9,049,198 |
| கிடைக்கப் பெற வேண்டிய ஏனைய | | (5,108) | 32,549 |
| | | **16,000,356** | **14,605,047** |
| **11.3 வைப்புகள் மற்றும் முன் செலுத்தல்கள்** | | | |
| பாதுகாப்பு வைப்புகள் | | 126,022 | 1,925,446 |
| முன் செலுத்தல்கள் | | 4,859,893 | 4,174,854 |
| செலுத்திய முற்பணம் | | 35,131,399 | 20,168,978 |
| பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட பணம் | | 12,502,564 | 12,502,564 |
| மீள செலுத்தும் வைப்புகள் | | 10,836,768 | 9,037,344 |
| கிடைக்கப்பெற வேண்டிய பிணை | | (180,679) | (180,679) |
| | | **63,275,967** | **47,628,507** |

**11.4 சந்தேகத்திற்கிடமான கடனாளிகள்**

2018 ஆம் ஆண்டில் பழைய மீதிகள் தொடர்பில் ரூபா.9,578,372/= இற்காக ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

| | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **12.பணமும் பணத்திற்கு சமமானவைகளும்** | | |
| வங்கி பணம் | 37,016,937 | 27,471,630 |
| கையிருப்பு பணம் | 773,210 | 531,276 |
| | **37,790,147** | **28,002,906** |
| | | |
| **வருமான ஒதுக்கத்தின் ஏனைய கூறுகள்** | | |
| ஆரம்ப மீதி | (124,916,200) | (123,528,974) |
| முன்னரான ஆண்டின் திருத்தங்கள் | 375,201 | (1,387,226) |
| | **(124,540,999)** | **(124,916,200)** |

வருவாய் ஒதுக்கத்தில் உள்ள ஏனைய கூறுகளுக்கிடயில் திரண்ட வருமான ஒதுக்கத்தின் ஊடாக மதிப்பாய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றிய முன்னரான காலப்பகுதிக்கு ஏற்புடையதான திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **13. ஓய்வூதிய நலன் பொறுப்புகள்** | | |
| ஆரம்ப மீதி | 56,203,979 | 50,896,038 |
| ஆண்டுக்கான பணிக்கொடை ஒதுக்கீடுகள் | 3,682,500 | 7,129,839 |
| ஆண்டில் பணிக்கொடை செலுத்தல் | (1,567,120) | (1,821,898) |
| 2020 இல் சீராக்கப்பட்ட பணிக்கொடை மீதி | (1,393,899) | |
| இறுதி மீதி | **56,925,460** | **56,203,979** |

1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் கீழ் ஓய்வூதிய நலன்களுக்கான பொறுப்புகள் அமைப்பின் ஊழியர்கள் உள்ளடங்கும் வகையிலான நலன் திட்டமாகும்.

## இலங்கை கைப்பணிகள் சபை
## நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

**14. பிற்போடப்பட்ட வருமானம் அளிப்புகளின் விபரங்கள்**

| | ஆண்டு | கடன்தீர்பபு விகிதாசாரம் | கிடைக்கப்பெற்ற ஆரம்ப அளிப்பு | 2020திசெம்பர் 31 திகதியில் கடன் தீர்ப்பு மீதி | 2021 ஆண்டில் கடன் தீர்ப்பு பெறுமதி | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் கடன்தீர்ப்பு மேற்கொள்ளாத மீதி |
|---|---|---|---|---|---|---|
| பொருளாதார அபிவிருத்தி | **2012** | 10% | 100,000,000 | 10,000,000 | 10,000,000 | - |
| வியாபார மற்றும் வர்த்தக அமைச்சு | **2013** | 10% | 36,000,000 | 7,200,000 | 3,600,000 | **3,600,000** |
| வரவு செலவு ஒதுக்கீடுகள் | **2013** | 10% | 10,224,643 | 2,044,929 | 1,022,464 | **1,022,465** |
| வரவு செலவு ஒதுக்கீடுகள் | **2013** | 10% | 42,109,637 | 12,632,890 | 4,210,964 | **8,421,926** |
| வரவு செலவு ஒதுக்கீடுகள் | **2013** | 10% | 11,099,920 | 2,219,984 | 1,109,992 | **1,109,992** |
| வரவு செலவு ஒதுக்கீடுகள் | **2013** | 10% | 7,828,426 | 1,565,687 | 782,843 | **782,844** |
| பொருளாதார அபிவிருத்தி | **2014** | 10% | 35,000,000 | 10,500,000 | 3,500,000 | **7,000,000** |
| வரவு செலவு ஒதுக்கீடுகள் | **2014** | 10% | 11,137,374 | 3,341,223 | 1,113,737 | **2,227,486** |
| **மொத்தம்** | | | **253,400,000** | **49,504,713** | **25,340,000** | **24,164,713** |

**இலங்கை கைப்பணிகள் சபை நிதிக்**
**கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **15. நீண்ட கால கடன்** | | |
| ஆரம்ப மீதி | 439,723,409 | 431,726,929 |
| ஆண்டில் பெற்றுக் கொண்ட கடன் | 78,964,206 | 8,323,585 |
| ஆண்டில் செலுத்திய கடன் | (41,101,385) | (327,105) |
| ஆண்டு இறுதி | 477,586,230 | 439,723,409 |
| (கழித்தல்) ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய | (93,804,348) | (54,444,000) |
| **நீண்டகால கடன் பிணைப்புகள்** | **383,781,882** | **385,279,409** |

15.1 இலங்கை வங்கி - 2020 ஆண்டு இறுதியில் கடன் மீதி ரூபா.மில்லியன் 273

2012-2018 காலப் பகுதிக்குள் ரூபா.மில்லியன் 950 ஆன கடன் தொகை கோட்டை கட்டிடத்தை ஈட்டுக்கு வைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பெற்றுக்கொண்ட கடன் தொகையில் கண்காட்சி கூடங்களின் தரத்தினை அதிகரிப்பதற்கு கடன் செலுத்துவதற்காக லக்சல தமது வருமானத்தில் அடைவினை கைப்பற்றியது. 2013-2019 வரையிலான காலப் பகுதியில் மூலதன கடன் தொகையினை சீராக்கப்பட்டு இலங்கை வங்கியின் கடன் தொகையான ரூபா.மில்லியன் 273 வரை குறைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை மூலதனம் மற்றும் வட்டி சீராக்குவதற்கு லக்சலவிற்கு இயலவில்லை. ஆகையால் இலங்கை மத்திய வங்கியால் வழங்கிய வகையில் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் தாமத சலுகைகள் பல வழங்கி, இலங்கை வங்கியிடம் செலத்தப்படாத கடன் தொகை ரூபா.மில்லியன் 306 ஆகியது.

## 15.2 2021 நிதி ஆண்டில் தற்போது காணப்படும் 03 கடன்களின் பொருட்டு தாமத சலுகைகள் ஆறு வழங்கப்பட்டன.

2020 இலங்கை வங்கியின் கடன் மீதி ரூபா. மில். 273

2021 இலங்கை வங்கியின் வட்டி மற்றும் மூலதனம் ரூ.மி. 33

**இலங்கை வங்கியின் மொத்த கடன் மீதி** ரூ.மில்.306

## 15.3 பிரதேச அபிவிருத்தி வங்கி - ரூபா.மில் .200

அவசர செயற்பாட்டு தேவைகளின் பொருட்டு ரூபா.மில்லியன் 200 ஆன கடன் வசதி 2013 ஆம் ஆண்டில் களணிய பிரதேச அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. பொது திறைசேரி வங்கி ஊடாக கடன் வசதி வழங்கப்பட்டதால் லக்சல மூலம் எந்தவொரு பிணையும் வழங்கப்படவில்லை. 2021 ஆம் ஆண்டில் C0VID - 19 காரணமாக ஏற்பட்ட நிதி நிலைமையால் லக்சலவிடம் செலுத்துவதற்கு முடியாது போன ரூபா.மில்லியன் 12.9 ஆன வட்டி மூலதனமயப்படுத்தப்பட்டது.

## இலங்கை கைப்பணிகள் சபை
## நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **16. வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள்** | | |
| வியாபாரம் - செலுத்தப்பட வேண்டிய | 290,919,988 | 334,334,840 |
| ஏனைய செலுத்தப்பட வேண்டிய | 119,436,360 | 112,410,635 |
| திரண்டு நின்ற செலவினம் | 71,917,604 | 75,811,084 |
| | **482,273,952** | **522,556,559** |
| **17. குறுகியகால கடன்** | | |
| நீண்டகால கடன் பொறுப்பு - தற்கால பகுதி | 93,804,348 | 54,444,000 |
| குறுகிய கால கடன் | 7,415,524 | 14,652,784 |
| | **101,219,872** | **69,096,784** |

| | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **18. வங்கி மேலதிக பற்று** | | |
| வங்கி மேலதிக பற்று | **986,112** | **5,353,692** |

ரூபா. 986,112.00 (2020 ரூபா. 5,353,692.00.00 ஆன வங்கி மேலதிக பற்று, ஆண்டு இறுதியில் பணப் பேரேட்டில் காணப்படும் மீதியாகும். நிதி ஆண்டில் இலங்கை வங்கி கடன் மீள்கட்டமைப்புடன் வங்கி மேலதிக பற்று வசதி ரூபா.மில்லியன் 15 வரை வழங்குவதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

**19.** **எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் பிணைப்புகள்**

**சபைக்கெதிராக விசாரணையில் உள்ள வழக்குகள்:**

| நீதிமன்ற இலக்கம் | வழக்கு தொடரப்பட்ட திகதி | வழக்கு தொடரப்பட்ட தரப்பு | வழக்கின் இயல்பு | தற்கால நிலைமை |
|---|---|---|---|---|
| DMR/0280/13 | 2015-07-13 | கோட்டே நகர சபை | சோலா பெணல் பொருத்துவதற்கான உடன்படிக்கை மீறுதல் தொடர்பில் கோட்டே நகர சபையால் லக்சலவிற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு. | கோட்டே நகர சபையிடம் வட்டியுடன் ரூபா. 4,020,000 ஆன தொகை செலுத்தப்பட வேண்டுமென தீர்ப்பு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் லக்சல இது தொடர்பில் மேன்முறையீடு தொடரப்பட்டுள்ளதுநீதிமன்ற தீர்ப்பு வழங்கப்படப்டுள்ளதால் 2021 திசெ. 31 ஆந் திகதியில் செலுத்தப்பட வேண்டிய அதற்கு சமமான தொகை வழங்கப்பட்டது. |
| DMR/2255/16 | 2016-05-09 | டிமோ தனியார் கம்பெனி | செலுத்தப்பட வேண்டிய மீதி செலுத்தாமை காரணமாக நிபந்தனைகள் மீறுதல் தொடர்பில் டிமோ நிறுவனம் லக்சலவிற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு | தீர்ப்பு வழங்கப்படவுள்ளதுடன், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் வலுவிலுருக்கும் வகையில் எந்தவொரு பொறுப்பும் இல்லை. |
| 138/2018/MR | 2018-03-08 | ஜெட் ஹோல்டிங்ஸ் (JAT Holdings) தனியார் கம்பெனி | லக்சலவால் சுற்றுலா சபையிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒப்பந்தமொன்று ஜெட் ஹோல்டிங்ஸ் சம்பெனியிடம் உப ஒப்பந்தமாக வழங்குதல் பொருட்டு செலுத்தப்பட வேண்டியுள்ள ரூபா. 8,184,683.49 ஆன கொடுப்பனவு தொடர்பில் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு | லக்சல (இலங்கை கைப்பணிகள் சபை) பொருட்டு சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்புகளை கவனத்தில் கொள்ளப்படடுள்ளது. |
| 139/2018/MR | 2018-04-10 | ஜெட் ஹோல்டிங்ஸ் (JAT Holdings) தனியார் கம்பெனி | உலக வர்த்தக நிலையத்தில் 22 ஆவது மாடியில் அமைந்துள்ள நடுத்தீர்ப்பு நிலையம் புனரமைப்பதற்காக லக்சலவால் நீதிமன்ற அமைச்சுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. லக்சல இதனை உப ஒப்பந்தமாக ஜெட் ஹோல்டிங்ஸ் கம்பெனியிடம் வழங்கி அந்த பணியினை பூர்த்தி செய்துள்ளது. ஆயினும் அந்த கம்பெனியிடம் செலுத்தப்பட வேண்டிய எஞ்சிய தொகை செலுத்தப்படவில்லை. இதன் காரணமாக ரூபா. 32,256,980 ஆன தொகை செலுத்தப்படாமை தொடர்பில் ஜெட் ஹோல்டிங்ஸ் கம்பெனி லக்சலவிற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு ஆகும். | லக்சல (இலங்கை கைப்பணிகள் சபை) பொருட்டு சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்புகளை சமர்ப்பித்துள்ளது. |

**உள்ளக உசாவுதல்கள்**

இலங்கை கைப்பணிகள் சபையின் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பணி தடை செய்யப்பட்ட சிரேட்ட அலுவலர்கள் இரண்டு பேருக்கு எதிராக உள்ளக புலனாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. புணிப்பாளர் சபையின் தீர்மானம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

தலைவர்

இலஙகை கைப்பணிகள் சபை

இலங்கை கைப்பணிகள் சபையின் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டுக்காக நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கைப்பணிகள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154 (6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படம்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 69 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்பு-க்கள் அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் தீர்த்து வைப்பதறக் நிர்ணயித்த பொதுவான செயல் நடவடிக்கையின் போது தீர்த்து வைப்பதறகு எதிர்பாாக் கப்படுகின்ற பொறுப்புக்கள் மாத்திரமே நடைமுறைப் பொறுப்பாக இனங்காணப்படுகின்றது. எனினும் நடைமுறைப் பொறுப்பாக காண்பிக்கப்பட்ட ரூபா 290,919,988 ஆன வியாபார கடன் கொடுத்தோர் மற்றும் ரூபா 119,436,360 ஆன ஏனைய கடன்கொடுத்தோர் மீதியில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலப் பகுதியில் அறவிட வேண்டிய ரூபா 135,406,440 மீதியும், மற்றும் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 168,912,845 மீதியும் காணப்பட்டது.

(ஆ) மீளாய்விற்கான ஆண்டில் மொத்த சொத்துகளாக 9.8% ஆன இரண்டாவது தரத்திலான இருப்புகளாக பழுதுபார்க்க வேண்டிய மற்றும் செயற்பாடற்ற இருப்புகளாக ரூபா.150,731,992 ஆக காணப்பட்டதுடன், அதன் காரணமாக இருப்புகளின் உண்மையான பெறுமதி வெளிப்படுத்தாமையால் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இல் 28 ஆவது பிரிவு பிரகாரம், இருப்புகளின் மீள்கணிப்பீட்டு தேறிய தேறக்கூடிய பெறுமதியை காண்பிக்கப்படாமையால் இறுதி இருப்புகள் மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இல் 34 ஆவது பிரிவு பிரகாரம் இருப்புகள் தொடர்பிலான எல்லா நட்டங்களையும் பதிவழித்தல் அல்லது நட்டங்கள் ஏற்பட்ட காலப்பகுதிக்குள் செலவினமாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டுமாயினும், சபையின் இருப்புக் கணக்கில் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.3,486,004 ஆன திரண்ட நட்ட இருப்புகளை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு பதிலாக நட்டம் ஏற்பட்ட இருப்புகளை சொத்துகளாக புத்தகங்களிலிருந்து முன்கொண்டு வருதல் காரணமாக மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக இருப்புகளின் பெறுமதி அந்த அளவில் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கோட்டை லக்சல கட்டிடத்தில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை உரிய வகையில் மேற்கொள்ளாமை மற்றும் வழக்கு நடவடிக்கை காரணமாக 2014 ஆம் ஆண்டில் அதற்காக மேற்கொண்ட ரூபா.45,451,390 ஆன தொகை 2021 ஆம் அண்டு வரை மேற்கொள்கின்ற வேலைகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த பெறுமதியில் உள்ளடக்கிய செலவினங்கள் மற்றும் சொத்துக்களின் பகுதி வெவ்வேறாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) மீளாய்விற்கான ஆண்டில் சபையின் வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுநர் மீதியில் ரூபா.74,917,550 ஆன வரவு மீதிகள் உள்ளடக்கியதால் குறித்த பெறுமதியால் கடன்கொடுநர் மீதி குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) கணினி கருவிகளின் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா.19,279,453 ஆன கணினி துணைக்கருவிகள் முற்றுமுழுதாக தேய்மானமடைந்துள்ளதுடன், பயன்பாட்டில் உள்ள கணினி துணைக் கருவிகளை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கும் பயன்படுத்த இயலாத மட்டத்தில் உள்ள கணினி துணைக்கருவிகளை பௌதீக ரீதியாக அடையாளம் காணப்பட்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை கடனாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.19,429,671 ஆன மீதி தொடர்பில், மீதிகளின் உறுதிப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஏ) 2012 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதியாக தீர்க்கப்படாதிருந்து முன்கொண்டு வரப்பட்ட அடையாளம் காணப்படாத ரூபா.12,002,564 ஆன பிடிபணம் தொகையின் மீதியை உறுதிப்படுத்திக்கொள்தற்காக எழுத்திலான சாட்சிகள் சமரப்பிக்கப்படவில்லை.

(ஐ) அட்டுறு செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா.6,546,541 ஆன செலவினம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஒ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள 4 வகையிலான சொத்துக்கள், ஆதனங்கள், சொத்துக்கள் என்பன, பௌதீக ஒப்பாய்வு அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா.132,389,269 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு இந்த வேறுபாடுகளை அடையாளம் காணுவதற்கு சபை தவறியிருந்தது.

(ஓ) மீளாய்விற்கான ஆண்டில் நிதி கூற்றுகளின் பிரகாரம் சபையின் செற்பாட்டு இருப்புகளின் பெறுமதி ரூபா.390,694,024 ஆயினும், பௌதீக இருப்புகளின் மீளாய்வு அறிக்கைகள் பிரகாரம் இருப்புகளின் பெறுமதி ரூபா.389,284,437 ஆகியதால் பதிவு செய்த பெறுமதிகளுக்கிடையில் ரூபா.1,409,590 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஔ) 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற செயற்பாட்டு இருப்பு பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட வழியில் உள்ள இருப்பு கணக்கின் பெறுமதி ரூபா 6,291,571 ஆக இருந்ததுடன், அதில் காணப்பட்ட மீதி கால ரீதியில˙ இணக்கம் செய்து சரியான இருப்பு பெறுமதியை தீர்த்து வைக்காமையின் காரணமாக உள்ளபடியாக காணப்படாத இருப்பு பெறுமதியொன்று கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

## 1.3 நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் என்னிடம் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற சபையின் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

சபையின் 2021 ஆம் ஆண்டு அறிக்கை வாசிக்கின்ற போது, அதில் பொருண்மையாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதென நான் முடிவு செய்தால், செவ்வைப்படுத்துவதற்காக நிருவகிக்கும் தரப்புகளிடம் குறித்த விடயங்களை அறிக்கையிடல் வேண்டும். மேலும் செவ்வைப்படுத்தாத தவறுதலாக காட்டப்படுதல் இருப்பின், அவற்றை 154(6) உறுப்புரை பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுகளுக்கான முகாமைத்துவத்தினதும், அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்பு கொள்கின்றேன்.

## 2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

**2.1** **2018** ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.1.1** **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12 (அ)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனம் பேணிச் சென்றிருந்தது.

**2.1.2** **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில **6 (1) (ஈ) (III)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி சபையின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

**2.1.3** **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **6 (1) (ஈ) (iv)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.2** கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12 (ஈ)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி தேசிய சபை கட்டுப்பாட்டுச் சபையின் உள்ள எவரேனுமொரு உறுப்பினர் சபையுடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது என்பது தொடர்பாக,

2.2.2 **-2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12 (ஊ)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாது செயற்படுதல் தொடர்பாக,

| | ஒழுங்குவிதிகள், ஏற்பாடுகளின் தொடர் | விபரம் |
|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் 9.1 பிரிவில் திருத்தப்பட்ட<br>i. நிதி ஒழுங்குவிதி 371 (5)<br><br>ii. நிதி ஒழுங்குவிதி 371 (2) (அ) | பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் ஊழியர்களால் பெறப்பட்டு 02 வருடங்களுக்கு குறைந்த ரூபா 708,818 ஆன நானாவித முற்பண தொகை இந்த அறிக்கை திகதியிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறே 2011 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு ஏற்புடையதாக சபையின் பல்வேறு பிரிவுகள், ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரிடம் வழங்கிய ரூபா.17,589,311 ஆன வியாபரம்- வியாபாரமற்ற கொள்வனவு முற்பண மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.<br><br>நாளாந்தம் சில்லறை செலவினங்களைச் செய்வதற்காக பதவி நிலை உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் சில்லறை செலவினங்களுக்காக ரூபா.25,000 ம் ஆன |

| | | |
|---|---|---|
| | | ஆகக் கூடிய உச்சவெல்லை வரை சில்லறைக் காசு உபகட்டுநிதியாக வழங்க முடியுமாயினும், 09 காட்சிகூடங்களுக்கு மற்றும் தலைமை அலுவலகத்தின் 2 பிரிவுகளிடம் குறித்த எல்லை விஞ்சி சில்லறை பணம் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | தாபன விதிக் கோவையில் XLVIII ஆம் அத்தியாயத்தின் 23 ஆம் பந்தி | சபையில் நிகழ்ந்துள்ள ஊழல்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட ஆரம்ப புலனாய்வின் போது வெளிப்படுத்தியுள்ள விடயங்களுக்கமைவாக இரண்டு அலுவலர்களால் மேற்கொண்டுள்ள துர்நடத்தை காரணமாக 2015 ஆம் அண்டு 24 ஆம் திகதி தொடக்கம் கடமை அலுவல்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 23 ஆம் திகதி இந்த அலுவலர்களிடம் குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டு மீண்டும் 2016 ஆம் ஆண்டு சனவரி 11, 2016 யூன் 21, மற்றும் 2016 யூன் 06 திருத்தம் செய்யப்பட்ட குற்றச்சாட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன்படி முறைசார் ஒழுக்காற்று விசாரணை 2020 பெப்ருவரி மற்றும் 2019 திசெம்பர் மாதங்களில் முடிவுறுத்தப்பட்டிருப்பினும், ஒழுக்காற்று கட்டளை 2022 ஒக்டோபர் மாதம் வரை வழங்கப்படவில்லை. |
| (இ) | 2003 ஒக்டோபர் 28 ஆம் திகதி (PED) 17 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | 2021 ஒக்டோபர் மாதம் தொடக்கம் 2022 மார்ச் 31 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட டுபாய் எக்ஸ்போ 2021/2022 சர்வதேச சந்தைப்படுத்தல் கண்காட்சி பொருட்டு லக்சல பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய அலுவலர்கள் வெளிநாட்டு சுற்றுலாவுக்காக அரச தொழில்முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் முன்னரான அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுடன், அலுவலர்களால் ரூபா.1,219,480 ஆன வெளிநாட்டு பிரயாணப்படி மற்றும் அதனைச் சார்ந்த செலவினங்கள் பெற்றுக்-கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 அன கணக்காய்வுச் சட்டத்தில் 111 ஆவது பகுதியில் 16(2) பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையில் 6.6 பந்தி | வரையுள் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுகள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுகள் 06 மாதங்கள் தாமதமடைந்து 2022 செப்தெம்பர் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும், வரையுள் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |

2.3 ஏனைய விடயங்கள்

(அ) சபையால் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 காலப்பகுதிக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டிருந்த வியாபர திட்டத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா.மில்லியன் 435 ஆன இலக்காகக் கொள்ளப்பட்ட விற்பனை வருமானம் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், 2021 ஆம் ஆண்டில் சபையால் உழைக்கப்பட்டிருந்த உண்மையான வருமானம் ரூபா.மில்லியன் 137 ஆகியதால் இலக்காகக் கொள்ளப்பட்ட தொகையில் 31% ஆன வருமானம் மட்டும் உழைக்கப்பட்டிருந்தது. விற்பனை வருமானம் அதிகரிக்கும் நோக்கில் 2021 ஆம் ஆண்டில் சபையால் ஏழு பட்டயம் பெற்ற வெளிநாட்டு சந்தைப்படுத்தல் முகவர்களுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருப்பினும், அந்த உடன்படிக்கை பிரகாரம் ஐக்கிய அமெரிக்கா குடியரசு மட்டும் விற்பனை நிலையம் திறந்திருந்ததுடன், 2021 ஆம் அண்டு ஆகஸ்ட் 06 ஆம் திகதி பட்டயம் பெற்ற முகவரிடம் செலவினம் ரூபா.15, 483,376 ஆன பொருட்கள் அனுப்பப்பட்டிருந்தன. விற்பனை முகவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையில் 5:4:1 பிரிவு பிரகாரம் வருமானத்தில் பகுதிகளை பகிரந்துக்கொள்ளுதல், முதலாவது மூன்று ஆண்டு காலப் பகுதியில் முதலாவது மாதத்தில் உழைக்கும் விற்பனை வருமானம் ஐக்கிய அமெரிக்க டொலர் 50,000 அல்லது அதற்கு மேற்படின் ஒரு மாதத்திற்கு 3% ஆன வருமான வீதம் சபையிடம் வழங்க வேண்டுமென இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பினும், இந்த றஅிக்கை திகதியிலம் அந்த பணத்தொகை கிடைக்கப்பெற வில்லை ன்பதுடன், பொருட்களின் விற்பனை விலையான ரூபா.19,889,698 ஆன தொகை வழங்கப்பட்டிரந்த வங்கி காப்பினை பணமாக்கப்பட்டு விற்பனை விலை மட்டும் தீர்க்கப்பட்டிருந்தது. சபையின் உள்நாட்டு விற்பனைகளுக்கு ஏற்புடையதாக உழைக்கும் இலாப எல்லை 50% தொடக்கம் 73% வரையிலான எல்லைக்குள் இருப்பினும், வெளிநாட்டு பட்டயம் பெற்ற விற்பனை நிலையங்கள் (பென்சயிஸ்) விற்பனைகள் மூலம் உழைக்கப்பட்டிரந்த இலாப எல்லை 22% போன்ற குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது.

(ஆ) சபையின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில் 2021 ஆம் ஆண்டு முதல் இணைய வழி ஊடாக விற்பனை திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் அதன் மூலம் ரூபா 769,513 வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது அந்த முறைமை செயலிழந்து காணப்பட்டது. தற்போது வரையில் இணைய வழி ஊடாக கொள்வனவு செய்வதற்காக மக்களில் அதிகமானவர்கள் முயற்சி எடுக்கும் வகையில் சபையினால் விரிவான 2021 ஆம் ஆண்டின் போது இணைய வழி ஊடாக விற்பனை திட்டம் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருந்த போதிலும், இணைய தளத்தை பேணிச் செல்வதற்கான தகவல் தொழில்நுட்ப பிரிவில் உத்தியோகத்தர்கள் காணப்படாத நிலைமையின் இடையே இந்த செயற்பாடுகளை தற்காலிகமாக கைவிட வேண்டியிருந்தமை மற்றும் எவ்வாறாயினும், Web

platform அலகு ஊடாக விற்பனை வருமானத்தை பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விளம்பரங்களின் மூலம் விற்பனை சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் செப்டம்பர் வரை ரூபா 37,856 வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.

(இ) 2020 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காலாவதியாவதற்கு அண்மித்த மற்றும் மெதுவாக அசைகின்ற இருப்புக்களை இனங்கண்டு விஷேட கழிவுகளை வழங்கி அவற்றை பணமாக்குவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. எனினும் ரூபா 9,455,546 பெறுமதியான இரத்தினக் கல் மற்றும் ஆபரண இருப்புக்கள் 2011 ஆம் ஆண்டு முதல் விற்பனை செய்யப்படாமல் பழைமையடைந்து காணப்பட்டதுடன், இந்த இருப்புக்களுக்காக ரூபா 8,102,312 தொகை அந்த காலப்பகுதியின் போது வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2018 மார்ச் 28 மற்றும் 2018 செப்டம்பர் 27 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நயாகத்தின் DMS 1702 மற்றும் DMS 1702/V01 - III இலக்க கடிதத்தின் மூலம் சபையின் பதவியணியினருக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க பதவியணியினர் உள்ளீர்க்கும் நிறுவனத்தின் நிதி நிலைமையை நல்ல நிலைக்கு கொண்டு வரும் வரை அமுல்படுத்தாமல் இருப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும் நீண்ட கால ரீதியில் பதவி உயர்வுகள் வழங்கப்படாத எதிர்பார்க்கப்பட்ட நிரந்தர பதவியணியினர் மற்றும் நிரந்தர சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு 05 பதவியணியினரில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு உரிய உள்ளீர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2006 செப்டம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் புதிய சம்பள திட்டத்தின் படி சம்பள மறுசீரமைப்பிற்கு முன்னர் உரிய சகல பதவிகளுகம் அந்ததந்த சேவைத் தொகுதிக்கும் மற்றும் சம்பள அளவிற்கும் உள்ளடங்குகின்ற வகையில் சீராக்கப்படுகின்ற முன்மொழிவுகள் தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்து சான்றிதழ் பெறப்படாதிருந்ததுடன், அதன் காரணமாக உள்ளீர்க்கப்பட்டதன் பின்னர் அதிகரிக்கக் கூடிய சம்பள அளவு தொடர்பாக அறியாமையால் உள்ளீர்த்தல் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டஉயர் சம்பள அளவுடனான பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படும் போதுஊழியர்களில் அநேகமானோர் கீழ் மட்ட சம்பள அளவில் வைக்கப்பட்டமையால் பதவி உயர்வுகளும் முகாமைத்துவத்தால் இழக்கச் செய்யப்பட்டிருந்தது.

(உ) கைப்பணிகள் சபையினால் தொழிற்படு மூலதன தேவைக்காக கோட்டை லக்சல கட்டிடத்தை அடகு வைத்து 2012-2018 காலப்பகுதியில் இலங்கை வங்கியில் இருந்து பெற்ற ரூபா 950 மில்லியன் கடன் தொகையில் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையில் மீதியாக காணப்பட்ட தொகை ரூபா 273 மில்லியன் ஆகும். 2020 ஆம் ஆண்டில் புதிய 03 கடன் பணமாக மீள் ஆவணப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கு செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டி

செலுத்தாமையின் காரணமாக கடன் தொகை மற்றும் வட்டியுடன் 2021 ஆம் ஆண்டு முதல் புதிய 9 கடன் தொகைகளாக வெளியிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அந்த கடன் அளவு ரூபா 306,276,632 வரை 12% அதிகரித்திருந்தது. இந்த கடன் பணத்திற்காக 2021 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 9,875,272 ஆன கடன் வட்டிப் பணம் இது வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வியாபாரரீதியாக கேந்திர இடத்தில் அமைந்துள்ள மேற்கூறப்பட்ட உயர் வணிக பெறுமதியுடைய 44,000 சதுர அடி அளவான கொழும்பு கோட்டை லக்சல நான்கு மாடி கட்டிடம் 2013 ஆம் ஆண்டின் போது நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக ICTAD நிறுவனத்தில் பதிவு இன்றிய ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது நவீன மயப்படுத்தல் நடவடிக்கைகள் லக்சல கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் போது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அதற்குரியதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த விசாரணை நடவடிக்கைகள் முடிவடையாதிருந்ததுடன், இதன் காரணமாக ஒப்பந்தகாரரின் கையிலுள்ள சபைக்குச் சொந்தமான சொத்துக்களில் இருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைஎடுத்தல் வேண்டும்.இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. ICTAD நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டுள்ள தொகையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மேலதிக பௌதீக பெறுமதி குறைக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தகாரர் ஒருவரின் பொறுப்பில் காணப்படுகின்ற கைப்பணிகள் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 30 மில்லியன் தொகையினை அறவிடுவதற்கு உள்ள சட்டரீதியான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதில் 1200 சதுரஅடி நில அளவு மாத்திரம் கோட்டை லக்சல காட்சிக்கூடம் நடாத்திச் செல்லப்படுவதுடன், பல வருடங்கள் முதல் இந்த கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு முடியாமல் விளைவற்று காணப்பட்டது. சபைக்குசொந்தமான 60 பேர்ச் அளவான இந்த கொழும்பு கோட்டை காணி மற்றும் 22 பேர்ச் அளவான காலியில் காணப்படுகின்ற காணி என்பவற்றின் பொருளாதார பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) இலங்கை மத்திய வங்கியின் சௌபாக்கிய கடன் முன்மொழிவுத்திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்பட்ட மீள்நிதியீட்டல் வசதியூடாக 2020/21 ஆம் ஆண்டுகளின் போது கொவிட் தொற்று நோய் நிலைமையின் இடையே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததன் விளைவாக நிறுவனத்தின் குறித்துரைத்த காலப்பகுதியில் வட்டி மற்றும் தவணைப் பணத்தை செலுத்துவதன் மூலம் பாதகமான இலங்கை கைப்பணிகள் சபைக்கு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 200 மில்லியன் கடன் தொகை 02 தவணைகளின் கீழ்கையளிக்கப்பட்டிருந்தது. இந்த கடன் தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அது ரூபா 158,399,824 வரை குறைவடைந்திருந்தது. எனினும், 2020 ஆம் ஆண்டில் வட்டி செலுத்தாமையின் அடிப்படையில் வட்டித் தொகை ரூபா 8,323,585 மற்றும் 2021 மார்ச் மாதம் வரை வட்டித் தொகை ரூபா 4,586,188 ஆக ரூபா 12,909,773 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது.

அதன் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மொத்த கடன் தொகை ரூபா 171,309,597 வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டிற்காக கடன் தவணை மற்றும் வட்டிப் பணமாக ரூபா 21,796,529 ஐ செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ). 1990 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட கைப்பணியாளர்களின் நலன்புரி நிதியத்தின் உறுப்புரை பிரமாணங்களின் பிரகாரம் கைப்பணியாளர் நலன்புரிக்காக Benevolent Fund என்ற பெயரில் பேணிச் செல்லப்பட்ட நிதியம் 2021 திசெம்பர் 31 வரை ரூபா 5,023,891 தொகை சேர்க்கப்பட்டு நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த நிதியத்தை கைப்பணியாளர் சபைக்கு கையளிப்பதற்கு 2007 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், இது வரை அது கையளிக்கப்படாமல் அரச வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கில் விளைவற்று காணப்பட்டது.

(ஐ) கைப்பணிகள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற வெளி அவரச தேவைக்காக பயன்படுத்துவதற்காக நாளாந்த நிதித் தேவைக்காக ஒப்பந்த வேலைகளுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிணை வைப்பிற்காக மக்கள் வங்கியில் சேமிப்பு கணக்கொன்று 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 2,249,872 ஆகும். அந்த கணக்கிற்காக 3 சதவீதம் ஆன சிறிய வட்டி சதவீதம் கிடைத்திருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் வட்டிப் பணமாக ரூபா 66,412 வங்கியானால் சேமிப்பு மீதியில் சேர்க்கப்பட்டிருந்தது. சபையினால் வெளி வேலைகள் அல்லது ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது தேவையான பிணைப் பணம் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப வைப்புச் செய்யப்படாமல் கணிசமான தொகையொன்று சேமிப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டதன் மூலம் கணிசமான வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஒ) மக்கள் வங்கியில் நுவரெலியா கிளையில் பேணிச் செல்லப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கில் 2013 சனவரி 01 ஆம் திகதி ஆரம்ப மீதி ரூபா 85,587 ஆக இருந்ததுடன், 2021 திசெம்பர் 31 இல் உளள்வாறு மீதி ரூபா 4,785,163 ஆகும். அவ்வாறே நடைமுறைக் கணக்கில் பணம் வைப்புச் செய்தல் பொருளாதார நலனொன்று கிடைக்காதிருந்ததுடன், மோசமான நிதி நெருக்கடிக்கு உட்பட்டிருந்த சபை இந்த நிதியினை ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றிக்காக அல்லது நாளாந்த நிதித் தேவைக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஓ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 11 ஆம் பகுதியின் 09 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 880 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய சகல அரசாங்க உத்தியோகத்தரிடம் பிணை வைப்பதற்காக மீண்டும் நிறுவனத்தின் ஊழியர்களிடம் இருந்து உரிய பணிகளை பகுப்பாய்வு செய்து ஊழியர்களில் பிணை வைக்க வேண்டிய ஊழியர்களுக்கு நிறுவனத்திற்கு மேலதிக கிரயமொன்றை செய்வதற்கு ஏற்படாத வகையில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை அந்த நிதிப் பிரமாணத்தை பின்பற்றி பிணை வைக்கும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பிணை வைத்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட்ட ஊழியர் பிணைப் பணம் உரிய உத்தியோகத்தர் பெயரில் சேமிப்பு கணக்கில்

வைப்புச் செய்யப்படாமல் ரூபா 2,410,000 தொகையொன்று சபையின் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அந்த தொகைக்கு வட்டி பணம் சபைக்கு கிடைக்காதிருந்த போதும், உரிய உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி பணம் சபையினால் மதிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டதன் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,289,567 மேலதிக கிரயமொன்றை செய்ய வேண்டியிருந்தது.

(ஓ) விற்பனைகளை மேம்படுத்தும் எதிர்பார்ப்பில் சபைக்குச் சொந்தமான கட்டிடங்களில் வியாபார நடவடிக்கைகளைச் செய்வதற்காக 07 வெளி நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன், 02 நிறுவனங்கள் மாத்திரம் வியாபார நடவடிக்கைகளை அமுல்படுத்தியதன் காரணமாக உடன்படிக்கையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய வாடகை மற்றும் இலாப வீதம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 08 வியாபார நிலையங்களுக்காக தும்முல்ல லக்சல கட்டிடத்தில் முதலாவது மாடியின் இட வசதிகளை வாடகைக்கு வழங்கியதற்காக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 4,869,200 வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தும்முல்ல காட்சி கூடத்திற்கு அடுத்தால் அமைந்துள்ள கட்டிடம் தனியார் நிறுவனத்திற்கு வியாபார நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய ரூபா 7,643,754 வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஔ) அமைச்சரவை தீர்மான இலக்கம் 12/1523/553/020 ஆம் இலக்க 2012 ஒக்டோபர் 11 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் காலி உனவட்டுன வரையறுக்கப்பட்ட இலங்கை சலுசல கிளையில் உள்ள ஆதனங்கள் இலங்கை கைப்பனிகள் சபைக்கு சட்டரீதியான உரித்தை கையளிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அதன் பிரகாரம் 2012 திசெம்பர் 12 ஆம் திகதி ஆதனங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 15,248,576 தொகை சலுசல நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஆதனங்கள் தொடர்பாக சலுசல நிறுவனத்திற்கு எதிராக ஏனைய தரப்பினர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR 4421/10 இன் கீழ் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன், மேலும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் அதனை கொள்வனவு செய்தவற்காக பணம் செலுத்தி 10 வருடங்கள் கழிந்திருந்த போதும், அந்த ஆதனங்களின் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டப்லியூ.பீ.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி